பக்கங்கள்: பதின்நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 04 திங்கட்கிழமை (18.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 173

18 MAY 2009

# பாதுகாப்பு வலய மக்கள் சகலரும் மீட்கப்பட்டுவிட்டனர் என அறிவிப்பு

## 3 நாள்களில் 50,000 பேர் அரச பகுதிக்கு வந்தனராம்

கொழும்பு, மே 18

வன்னியில், பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்த பொதுமக்கள் அனைவரையும் படையினர் மீட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை, கடந்த மூன்று நாள்களில் ஐம்பதாயிரம் மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளனர். இதன் மூலம் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து அவர்கள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளனர். - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 18

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மே மாத 4 ஆவது கப்பலிற்கான அனுமதிச் சீட்டினைப் பெற்றுக்கொண்டவர்களையும் அவசர தேவையின் நிமித்தம் செல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுக்கத் தயார்

### புலிகளின் சர்வதேசப் பிரிவுத் தலைவர் தெரிவிப்பு

லண்டன், மே 18

எமது மக்களைப் பாதுகாப்பதே இப்போதுள்ள அவசர பணியாகும். அதனைக் கவனத்தில் கொண்டு, எமது மக்களைப் பாதுகாப்பதற்காக எமது ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுப்பதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளி

(14ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் பகுதியிலுள்ள மக்களுக்கு உதவ தொண்டு நிறுவனங்களை அனுமதிக்குக!

### அரசிடம் பாப்பாண்டவர் வலியுறுத்து

கொழும்பு, மே 18

மோதல் பிரதேச மக்களுக்கு, தொண்டு நிறுவனக் குழுக்களின் பணி அவசியம். எனவே, அப்பகுதிகளுக்கு பணியாளர்களை அனுப்ப இலங்கை அரசு முன்வர வேண்டும் - என்று பரிசுத்த பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற் வலியுறுத்தியுள்ளார்.

அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவசரமாகத் தேவைப்படுகின்ற மருந்து, உணவு மற்றும் சுத்தமான தண்ணீர் போன்றவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொண்டு நிறுவனக் குழுக்கள், மோதல் பிர

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தின் புலிகள் உள்ள சிறுபகுதியில் பீரங்கித் தாக்குதலை நிறுத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை



கொழும்பு, மே 18

''இலங்கையில் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பே கிடையாது. தற்போது எஞ்சியுள்ள சின்னஞ்சிறு பகுதியில் புலிகள் மட்டுமே உள்ளனர். அப்பகுதியில் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்கள் நடைபெறும். அதை நிறுத்துவது தொடர்பாக எந்தப் பேச்சுக்கும் இடமில்லை.''

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் யுத்த வெற்றி குறித்து சபையில் நாளை ஜனாதிபதி உரை

கொழும்பு, மே 18

ஜோர்தானிலிருந்து நேற்று நாடு திரும்பிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கின் யுத்த வெற்றி தொடர்பாக நாளை நாடாளுமன்றில் நாட்டு மக்களுக்கு விசேட உரை ஒன்றை நிகழ்த்துவார்.

அரச தகவல் திணைக்களம் நேற்று இந்தத் தகவலைத் தெரிவித்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படாதவரை போர் முடிவடைந்ததாகக் கருதிவிட முடியாது

### ஐ.நாவின் ஜோன் ஹோம்ஸ் சொல்கிறார்



கொழும்பு, மே 18

அரசியல் ரீதியான தீர்வுத் திட்டத்தின் மூலம் தமிழர்களுக்குச் சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்படாத வரையில் போர் முடிவடைந்து விட்டதாகக் கருதமுடியாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகார உதவிச் செயலாளர் நாயகம் ஜோன்ஹோம்ஸ்.

இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:- இராணுவ ரீதியாக

(14ஆம் பக்கம் பார்க்க)

## போர் முனையில் சிக்கியுள்ளோரை மீட்கும் வரை இந்திய அமைச்சரவையில் தி.மு.க. பங்குபெறாது

### முதல்வர் கருணாநிதி நிபந்தனை



சென்னை, மே 18

ஈழத்தில் போர் முனையில் இன்னும் சிக்கிக் கொண் டுள்ள ஐம்பதாயிரம் தமிழர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்ட பின்னரே அமைச்சரவையில் சேருவது பற்றி முடிவு செய் யப்படும் - என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இதனால் மத்திய அரசுக்கு தி.மு.கவின் ஆதரவு இல்லை என்று பொருளாகி விடாது, அரசுக்கு வெளியில் இருந்து மட்டுமே ஆதரவு கொடுக்க முடிவு செய்துள்ளோம் என்று நேற்றுக் கூடிய தி.மு.க. செயற்குழுவில் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

இது பற்றி தி. மு. க. பொதுச் செயலாளர் பேராசிரியர்

(13ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறிய வைத்தியர்கள் இருவர் உட்பட மூவர் மாயம்!

கொழும்பு, மே 18

பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிச் சென்ற கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் துரைராஜா வரதராஜா ஆகியோரின் நிலை குறித்து ஐ.நா. சபை கவலை வெளியிட்டுள்ளது.

இந்த வைத்தியர்கள் இருவரும் மற்றும் நிர்வாக அதிகாரியொருவரும் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறிய வேளை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

(14ஆம் பக்கம் பார்க்க)

LAVA HOSPITAL #75, TEMPLE ROAD, JAFFNA - T.P.: 021 2224333

அன்புக்குரியவரின் ஆரோக்கியத்தில் அக்கறையாக இருப்போம்.



யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக லாவா வைத்தியசாலை வழங்கும்

உடல் பரிசோதனைக்கான - வவுச்சர்

இதனை உங்கள் அன்புக்குரியவர்க்கு பரிசளிப்பதன்மூலம் அவர் ஆரோக்கியத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகின்றீர்

எம்மிடம் உள்ள PACKAGES

★ சலரோக நோயாளிக்கான Package 1800/- ★ பிறஷர் நோயாளிக்கான Package 2000/=

★ பருமனான உடல் உள்ளவர்க்கான Package 1200/- ★ முழு உடல் பரிசோதனைக்கான Package 4000/=

★ ஆசிரியர்களுக்கான விசேட Package 2100/-

கிளைகள்: 151, கன்னாதிட்டி வீதி, யாழ்., T.P: 2227251

71, சிவப்பிரகாசம் வீதி (வண்ணார்பண்ணை), 90/7, பொற்பதி வீதி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு குறித்த ஒரு வங்கியில் கணக்கு இருப்பது அவசியமில்லை

## மாகாணக்கல்வித் திணைக்களம் அதிபர்களுக்கு அறிவுறுத்து

அச்சுவேலி, மே 18

ஆசிரியர்களின் சம்பளத்தை ஆசிரியர்களின் வங்கிக் கணக்குக்கு ஊடாக வழங்கும் செயற்பாட்டில் ஆசிரியர்கள் குறித்த ஒரு வங்கியில் தான் கணக்குகளை ஆரம்பிக்கவேண்டும் என அதிபர்கள் வலியுறுத்தக்கூடாது. ஆசிரியர்களின் கணக்கு எந்த வங்கியில் இருந்தாலும் குறித்த ஆசிரியரின் வங்கிக் கணக்குக்கு அதிபர்கள் சம்பளப் பணத்லத அனுப்பி வைக்கவேண்டும்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அதிபர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தியுள்ளது.

ஆசிரியர்களின் சம்பளத்தை ஆசிரியர்களின் சொந்தவங்கிக் கணக்குக்கு ஊடாக வழங்கும் விடயம் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் மாறுபட்ட நடைமுறை பின்பற்றப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் மாகாண கல்வித்திணைக்களம் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளன.

குறித்த வங்கிகளின் பெயரைக் குறிப்பிட்டு தமது பாடசாலை ஆசிரியர்கள் எல்லோரும் அந்த வங்கியிலேயே கணக்கை ஆரம்பித்து கணக்கு இலக்கங்களை ஒப்படைக்குமாறும் வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் அதிபர் கூறிய வங்கிகளில் கணக்கு இல்லாவிடில் சம்பளத்தை உரிய முறையில் வழங்கமுடியாது எனவும் ஆசியர்கள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வலயக்கல்வி அலுவலக கணக்காளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்.

சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளதோ அந்த வங்கிக் கணக்குக்கு அதிபர்கள் சம்பளத்தை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தில் அதிபர்கள் விளக்கக் குறைவாகவும் தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்தும் நிர்வாகத்தை முன்னெடுப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆசிரியர்களின் சம்பளம் வழங்கும் விடயம் தொடர்பாக பொருத்தமான விளக்கம் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் சம்பளத்தை உரிய நேரத்துக்கு உரிய முறையில் வழங்குவது முகாமைத்துவத்தின் முன் மாதிரியை எடுத்துக் காட்டும்.

தற்பொழுது வங்கிகளின் செய்றபாடுகள் கணனி வலைப்பின்னல் அமைப்பில் இணைக்கப்பட்டிருப்பதும் தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரங்கள் மூலம் பணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதும் சம்பளத்தை வழங்குவதில் சிரமம் இருக்காது.

அதே நேரத்தில் பாதுகாப்புப் பிரச்சினை இல்லாத நிலையில் வங்கிகளுக்கு அண்மையில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் விரும்பினால் பழைய நடைமுறையில் பணமாக ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்குவதில் திணைக்களம் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை - எனத் தெரிவித்தார்.

(203 - 11)

## படுகாயங்களுடன் நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதி

மானிப்பாய், மே 18

மானிப்பாய், சங்குவேலியைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கு வேலியைச் சேர்ந்த எஸ். விஜயரட்ணம் (வயது 74), கே.இரட்ணேஸ்வரன் (வயது 68), கே.நவரட்ணம்(வயது34), எஸ். செல்வராசா (வயது 58) என்போரே படுகாயமடைந்து அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதனாலேயே இவர்கள் படுகாயமடைந்தனர் என்று சொல்லப்படுகின்றது.

(6-78)

## இந்து அமைப்புக்களின் ஒன்றியம் இன்றிலிருந்து நல்லை ஆதீனத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம், மே 18

இந்து அமைப்புகளின் ஒன்றியத்தின் செயற்பாடுகள் யாவும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்துக்கான தபால் முகவரி ''இந்து அமைப்புகளின் ஒன்றியம்'' நல்லை ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம் என்பதாகும். ஒன்றியத்துக்கான வங்கிக் கணக்கு ஒன்று யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் ''இந்து அமைப்புகளின் ஒன்றியம்'' எனும் பெயரில் 1060069285 இலக்கம் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் கரும பீடம் மு.ப 10 மணியிலிருந்து ந.ப 12மணி வரையும் பி.ப 4 மணியிலிருந்து 5மணி வரைக்கும் செயற்படும். நல்லை ஆதீன தொலைபேசி இலக்கம் 021 222 2870 ஆகும்.

(அ-07)

## கடலோட்டு பயிற்சி முடித்தவர்கள் சான்றிதழ்களைப் பெறலாம்

வண்ணை, மே 18

யாழ். கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களின் சான்றிதழ்கள் வழங்கத் தயாராக உள்ளதாக உதவிப்பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதன்படி 2008ஆம் ஆண்டு சித்திரை - ஆனி மற்றும் 2008ஆம் ஆண்டு ஆவணி - கார்த்திகை ஆகிய காலகட்டங்களில் தேர்வு பெற்றவர்களதும் அதற்கு முன்பதான ஒருசிலரதும் சான்றிதழ்கள் கல்லூரியில் உள்ளதாகவும் அலுவலக நேரங்களில் கல்லூரிக்கு சம்பந்தப்பட்டவர்கள் வந்து சான்றிதழ்களைப் பெற்றுச்செல்லாம் என்றும் அவர் கூறினார்.

(அ-160)

## திறந்த பல்கலைக்கழக இயந்திரவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தோருக்கு

யாழ்ப்பாணம், மே 18

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பம் பெற்று இயந்திரவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ். இணைப்பாளர் கேட்டுள்ளார்.

தமது அனுமதிக்கான கடிதங்கள் கிடைக்கப் பெறாத மாணவர்களும் பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளார்.

(அ-7-267)

## கிணற்றில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மே 18

வயோதிப மாது ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முத்துராசா நீற்ரம்மா (வயது 65) என்பவரே மரணமானவர் ஆவார்.

இவர் முகம் கழுவுவதற்காக தண்ணீர் அள்ளிய வேளையே தவறி விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் உறவினர்களால் கொண்டு வரப்பட்டு மரணவிசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது.

(அ-78)


**லண்டனில் உயர்கல்வி பயில்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு**

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள (லண்டன்) உள்துறை அலுவலகத்தால் "A" தரத்தில் பட்டியலிடப்பட்ட தலைசிறந்த, நீண்டகால வரலாற்றையுடைய பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் அனுமதி.

குறைந்த கட்டணச்சலுகைகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள், தங்குமிடவசதி ஏற்பாடுகள், பகுதிநேர வேலைக்கான ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

உடன் தொடர்புகளுக்கு :-

தொ.பே.0212223818, 0774528818
E.Mail : mg 1404_2009@ yahoo.com

*148, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*( யுனிசெவ் முன்பாக)*



**தேவை**

புறொயிலர் ஊர்ச் சேவல் 1 Kg 450/= இற்கு கொள்வனவு செய்யப்படும்.
158/4, தாசன் பாம், கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்
18 ★ 11 ★ 1929



விண்ணகம்
29 ★ 05 ★ 2008

**திருமதி நித்தியலட்சுமி இலட்சுமணர்**

திதி: நவமி

காலத்தைப் பொன்னாகக் கருதி
கடமையை கண்ணாகக் கருதி
வாழ்ந்தீர்கள் அம்மா...
ஓராண்டு சென்றாலென்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலென்ன
உங்களை என்றென்றும்
மறவோம் அம்மா...
என்றென்றும் உங்களை
நினைவு கூரும்

*இல: 07, ஐயனார் கோயில் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி பக்கீர்சாமி (singer) இராஜமணி** (கனடா)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கன்னாதிட்டி, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி பக்கீர்சாமி இராஜமணி நேற்று (17.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா ஆச்சாரி-இளையபிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான லெட்சுமண ஆச்சாரியார்-முல்லையம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் பக்கீர் சாமியின் (முன்னாள் முகாமையாளர், சிங்கர் கொம்பனி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் இராஜனின் பாசமிகு தாயும் கீதாவின் பாசமிகு மாமியும் ரத்திகா, யாதவன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற நவாலி கந்தையா ஆச்சாரி மற்றும் ரெத்தினம் ஆச்சாரி(C. T.B), இராமலிங்கம் ஆச்சாரி, கன்னாதிட்டியைச்சேர்ந்த சிற்பாசாரியார் சின்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னலெட்சுமி(கனடா), காலஞ்சென்ற வேணுகோபால் ஆச்சாரி மற்றும் அம்புயம், கமலவல்லி (கொழும்பு), கெங்காதரன் ஆச்சாரி, இராஜேஸ்வரி, ஜெகநாதன்(கொழும்பு), மகேஸ்வரி (ஜேர்மனி), நாகேஸ்வரி(வவுனியா) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சின்னத்துரை ஆச்சாரி (தலையாளி) மற்றும் ருக்குமணி, காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் இராமையா, வசந்தமல்லிகா, கந்தையா தனலெட்சுமி, கணபதிப்பிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.05.2009 புதன் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

L. Packirisamy
5430,yonge street # 201
North York, Ontario
T.P.No: 0014162180301
0212228415

தகவல்:-
கலாபூஷணம் L.கெங்காதரன் ஆச்சாரி
(மைத்துனர்)
306, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**திருமதி யோகேஸ்வரி பரமசிவம்**

வெல்லிக்கந்தோட்டம்

துன்னாலை, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையில் வசித்தவருமான திருமதி யோகேஸ்வரி பரமசிவம் 16-05-2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தில்லை நடராசா - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் கந்தவனம் - அழகரத்தினம் தம்பதியினரின் மருமகளும், சிவகுமாரி (அசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை- கொழும்பு- 04 ), பரமதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீ பாஸ்கரன், வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷனின் பாட்டியும் புவனேஸ்வரியின் அன்புத் தங்கையும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேதாரணியத்தின் மைத்துனியும் கதிர்காமலனின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் தெஹிவளை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பி.ப. 4 மணியளவில் பூதவுடல் கல்கிஸை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.6, Inner Fairline Road,
Dehiwela
T.P:2723730

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்

**மரியாம்பிள்ளை அந்தோனிமுத்து** (புத்திரர்)



போயிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அந்தோனிமுத்து 16.05.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கஸ்பார் - மரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கமணியின் அன்புக் கணவரும் ஞானரத்தினம், தங்கமணி, ராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசேந்திரம், காலஞ்சென்ற றோஸ் மற்றும் நேசம் ஆகியோரின் மைத்துனரும் செல்வராணி (செம்பியன்பற்று), மல்லிகா (அவுஸ்திரேலியா), ரவி(இத்தாலி), காலஞ்சென்ற துரை மற்றும் சுகந்தி (பிரான்ஸ்), யஸ்ரீன் (அவுஸ்திரேலியா), சியாமளா (லண்டன்), றீற்றா (போயிட்டி), கண்ணன் (போயிட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மருசலீன் (செம்பியன்பற்று), றட்ணராஜா (அவுஸ்திரேலியா), றாஜேஸ்வரி(இத்தாலி), வசந்தராசா(பிரான்ஸ்), விஜிதா (அவுஸ்திரேலியா), அலோசியஸ்(லண்டன்), ஜெறோம் (செம்பியன்பற்று), கொறற்றி (போயிட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தீபா, லங்கன்(இத்தாலி), ஜெனா, விஜய், ஜோய், அருணா, சங்கீதா, மதுவித்யா அன்ரனி (அவுஸ்திரேலியா), ஜினோலினி, டினோஷன், ஜினோத் (பிரான்ஸ்), டிலுஷா, டிலக்ஷன், டிஷான்(லண்டன்), விலுக்ஷி, அஸ்விதா (அவுஸ்திரேலியா), சுகன்யா, சுவேதா, ஆகாஷ், அஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும் டெனிசியின்(இத்தாலி) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(18.05.2009) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு போயிட்டி லூர்து அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*போயிட்டி, இளவாலை.*

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்களின் இன்றைய நிலை....

மகிழ்ச்சியில் கொண்டாடித் திளைக்கிறது தென்னிலங்கை. தெற்கு எங்கும் வெற்றிக் களிப்பு. பேருவகை ஆரவாரம். எதிரி தேசத்தை அடியோடு வீழ்த்திய சந்தோஷம். சிறுபான்மையினரான தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிட்ட பெருமிதத்தில் வெடிக்க வைக்கப்படும் பட்டாசுகளால் தலைநகரம் அதிர்கின்றது.

இனி என்ன என்பதுதான் இப்போதைய கேள்வி.

சர்வதேசம் கைவிட்டுவிட்டது. 'தொப்புள் கொடி' உறவுகளும் எதிர்பார்த்ததைச் செய்யவில்லை. அல்லது செய்ய முடியாமல் போயிற்று. இனி, அடக்குமுறைக்குள் நசிந்து கிடப்பதுதான் வாழ்வு என்றாகி விடும் என்ற அவநம்பிக்கையின் எல்லையில் தமிழினம்.

'தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும். எனினும் தர்மம் ஒரு நாள் வெல்லும்.' - என்பதுதான் மானுடத்தின் அசையாத நம்பிக்கை.

இன்று நிலைமை என்ன? தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வியுள்ளதா? அல்லது தர்மம் வென்றுள்ளதா? இன்றுள்ள யதார்த்த நிலைமை எத்தகையது?

பயங்கரவாதத்துக்கு எதிராகத் தர்மம் கடைசியில் வென்றுள்ளது என்கிறது தென்னிலங்கைச் சிங்களம்.

'அடிமைப்படுத்தல்' என்ற பேரினவாதத்தின் சூது, தமிழர் தாயகத்தைக் கவ்வியுள்ளது எனக் கருதுகிறது தமிழினம்.

புலிகளின் பிடியிலிருந்து நாட்டின் முழுப் பிரதேசங்களையும் முற்றாக விடுவித்து வெற்றி கொண்டாயிற்று என ஜெயமுரசு கொட்டுகின்றது சிங்களம்.

பேரினவாத மேலாதிக்கத்தின் ஆக்கிரமிப்பு தமிழர் தேசம் எங்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிர்க்கதியில் தமிழ்த் தேசியம் சிக்கிவிட்டது என்கின்றனர் சிறுபான்மையினரின் தேசியம் குறித்துச் சிந்திப்போர். சோகத்தின் எல்லையில் சிறுபான்மையினர்.

இப்பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கணம் வரை கனன்று கொண்டிருக்கும் ஆயுதங்களினால் கொன்றொழிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களின் எண்ணிக்கையோ பல்லாயிரம். படுகாயமடைந்தோரின் எண்ணிக்கை அதைவிடவும் பல மடங்குகள். உயிர், உடைமை அழிவுகளும் நாசங்களும் சொல்லில் அடங்காதவை. இந்த அழிவுகளாலும், அடிமைப்படுத்தப்பட்டோம் என்ற அவமான உணர்வினாலும் ஓரினம் மனம் சிதைந்து சோகத்தில் குன்றியிருக்க அதைப் பெரு வெற்றியாகக் கொண்டாடி மகிழ்கின்றது தென்னிலங்கை.

இந்த மனிதப் பேரழிவுகளின் பின்னால் புதைந்து கிடக்கும் பயங்கரங்கள் பற்றிய உண் மைகள் மூடி மறைக்கப்பட்ட நிலையில் - நீதி குழி தோண்டிப் புதைக்கப்பட்ட பின்னணியில் - வெற்றிக்களிப்பு பெரும் எக்காளமாக ஒலிக்கின்றது. அந்தச் செருக்கு மிகு எக்களிப்பு சிறுபான்மையினரின் நெஞ்சத்து உணர்வை நாராசமாக விழுந்து கிழிக்கின்றது.

'பயங்கரவாதத்தை ஒழித்தல்' என்ற முரசு அறைதலோடு -

யுத்தப் பிரதேசத்துடனான சுயாதீனத் தொடர்பாடல்களைத் துண்டிக்கச் செய்து, அப்பகுதியை உலகின் பார்வையில் படாமல் இருட்டில் வைத்துக்கொண்டு -

அங்கு கொடூரப் புயலாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, தமிழர்களின் ஆன்மாவில் நிரந்தரமான பேரிடியாக வீழ்ந்திருக்கின்றது. நீதி, நியாயமின்றி பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டு, அவயவங்கள் துண்டிக்கப்பட்டு, நடைப் பிணங்களாக்கப்பட்ட அவலம், பதுங்கு குழிகளுக்குள் புதையுண்ட உண்மைகளாக மூடி மறைக்கப்பட்டு மண்ணோடு மண்ணாக்கப்பட்டு விட்டன. அந்த யுத்தக் குற்றங்கள், கொடூரங்கள் எல்லாம் 'தேசிய விடுவிப்புச் சாதனைகளாக' பிரகடனப்படுத்தப்பட்டு, அந்தக் கொடூரங்களை இயற்றியவர்களுக்கு விசேட விருதுகளும், அதியுயர் கௌரவங்களும் வழங்கும் நிகழ்வுகளும் இனிமேல் ஆர்ப்பாட்டமாக அரங்கேறும்.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும், சுயாதீன ஊடகத்தினரும், உலகப் பார்வையாளர்களும் இல்லாத இந்த வாய்ப்பான சூழ்நிலையைப் பயன் படுத்தி, மேற்படி யுத்தக் குற்றங்களை மறைக்கும் கைங்கரியங்கள் திரைமறைவில் கனகச்சிதமாக நிகழும்.

யுத்தப் பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளை கனரக ஆயுதங்கள் மூலம் கண்மண் தெரியாமல் கொன்றொழித்த சம்பவங்களை அவ்வப்போது உலகுக்கு எடுத்துரைத்த சுயாதீனத் தரப்புகளான - தம் உயிருக்கு அஞ்சாமல் உயரிய மருத்துவ சேவைக்குத் தம்மை அர்ப்பணித்த - இரண்டு மருத்துவர்கள் குறித்தும் இப்போது தகவல் ஏதும் இல்லை.

அவர்களையேனும் காப்பாற்றி, இதுவரை நிகழ்ந்த கொடூரங்களை அம்பலப்படுத்தும் சாட்சிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என சர்வதேசத்திடம் தமிழர் தரப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கையும் வழமை போல 'செவிடன் காதில் ஊதிய சங்கு' ஆயிற்று.

இனி என்ன? நாம் ஏற்கனவே குறிப்பிட்ட படி, கொடூரங்களை மூடி மறைக்கும் கொண்டாட்டங்கள் அரங்கேறும். தொடர் அடக்குமுறையும் நிரந்தரமாகும். மௌனம் சம்மதம் என அதற்கும் சர்வதேசம் வழமை போல தலையாட்டிப் பார்த்திருக்க வேண்டியது. சற்று வித்தியாசத்துக்கு வேண்டுமானால் ஓரிரு கண்டன அறிக்கைகளை - அறிவிப்புகளை - பெயருக்கு விடும் வழமையும் தொடரலாம். அவ்வளவுதான்!

இத்தனைக்கும் காலம்தான் பதில் சொல்லும் என்று காத்திருப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை என்றாகிவிட்டது.

# இலங்கை மீதான ஒபாமாவின் குற்றச்சாட்டு: உதாசீனம்; பாரியவிளைவை ஏற்படுத்தும்

நேற்றைய (17.05.2009 இல்) அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் கட்டுரையில் இருந்து சில பகுதிகள்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் தெற்கில் பெரும் கொண்டாட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்னோடி நிகழ்வுகள் தொடங்கியுள்ள வேளையில் சில நேரம் தேசிய விடுமுறையொன்று அறிவிப்பதற்கான நிலைமையும் காணப்படுகின்றது. அதேசமயம் இலங்கை அரசின் மீதான சர்வதேச அழுத்தங்களும் அதிகரித்துள்ளன.

கடந்த புதன்கிழமை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அமைச்சரவை உறுப்பினர்களுடன் வன்னியின் இறுதிநேர நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகள் நடத்திக் கொண்டிருந்த அதேவேளையில் வாஷிங்டனில் அமெரிக்க அதிபர், பராக் ஒபாமாவும் தமது உயர் அதிகாரிகளுடன் இலங்கை விடயமாகவே ஆலோசனைகள் நடத்தியிருந்தார்.

சர்வதேச மட்டத்திலும் இந்தியாவிடமிருந்தும் போர் நிறுத்தம் செய்யும்படி வந்த அழுத்தங்களை இலங்கை ஜனாதிபதி துணிச்சலுடன் நிராகரித்திருந்தார். அதேசமயம் இலங்கைக்கு எதிராக உலகளாவிய நிலையில் உருவாகியிருந்த எதிர்ப்பிரசாரங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் போய்இறங்கிய கையோடு அங்குள்ள இலங்கையர்கள் மத்தியில் பேசுகையில் போராளிகளால் பணயமாக வைக்கப்பட்டுள்ள மக்களை 48 மணிநேரத்தில் விடுவிக்கப்போவதாக அவர் அறிவித்திருந்தார்.

அங்கு போவதற்கு முன்பே பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து போர் நிறுத்தப் பகுதியை மீட்டெடுக்கும் பணி ஒருசில தினங்களில் முடிந்து விடும் என்றும் அறிந்திருந்தார்.

### தேசிய விடுமுறை அறிவிக்கப்படும்

புலிகள் இராணுவமட்டத்தில் தோற்கடிக்கப்பட்டமையை தேசிய ரீதியில் கொண்டாடுவதற்குப் பெரும் எடுப்பில் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. தேசிய விடுமுறையொன்று அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

இந்த நிலைமையில் எல்லோரது கவனமும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பக்கமே திரும்பியுள்ளது. இராணுவ அதிகாரிகளின் கருத்துப்படி போர்நிறுத்தப் பகுதியில் அவர் சிக்குண்டிருக்கின்றார். பெரும் எண்ணிக்கையான பொதுமக்களைக் கேடயமாகக் கொண்டு பாதுகாப்பாக இருக்கிறார். அவருடன் ஏராளமான உயர் மட்டப் புலித் தலைவர்களும் இருக்கின்றார்கள். அவ்வாறாயின் பல வருடங்களாக அவருடன் சேர்ந்து செயல்பட்ட முக்கிய தலைவர்கள் அவர்களுடன் உள்ளனர்.

ஏனையவர்கள் பிடிபடாமல் இருப்பதற்காகச் சயனைட் குப்பிகளைக் கடிக்கும்படி செய்தது போல் இவர்களும் எல்லோருமாக சயனைட் குப்பிகளைக் கடித்து உயிர் துறப்பார்களா? என்பது தெரியவில்லை. சிலவேளை அவரும் முக்கிய தலைவர்களும் தப்பிச் சென்றிருப்பார்களானால் நிலைமை என்ன? இவைகளுக்குப் பதிலளிப்பது இப்போது சாத்தியமில்லை.

### ஒபாமாவின் முக்கிய எச்சரிக்கை

அமெரிக்க அதிபர் அரிசோனா மாநிலத்திற்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன் வாஷிங்டனில் இலங்கை தொடர்பான அறிக்கையொன்றை அவசரமாக வெளியிட்டிருந்தார். இந்த அறிக்கை இலங்கையில் வெளிநாட்டமைச்சு அதிகாரிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அதற்கு முதல் நாள் நிகழ்ந்திருந்த ஒரு சம்பவமே ஒபாமா இந்த அறிக்கையை அவசரமாக வெளியிடவேண்டிய நிலைமையைத் தோற்றுவித்திருந்தது என்று கருதப்படுகின்றது. அந்தச் சம்பவம் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் மற்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுக்குமிடையில் ஏற்பட்ட சந்திப்பாகும்.

இரு வாரங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் மில்லிபாண்ட் பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர் பேர்னார்ட் கவுச்னருடன் இலங்கைக்கு வந்து வன்னியிலுள்ள பொதுமக்களை அப்புறப்படுத்துவதற்கு வசதியாக மோதல்களை நிறுத்தும் படியாக கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இவ்வாறு இரண்டு தடவைகள் போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டும் புலிகள் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை, பொது மக்களையும் தப்பிச்செல்ல அனுமதிக்கவில்லையென்று ராஜபக்ஷ தெரிவித்ததுடன் பிரிட்டிஷ் - பிரெஞ்சு அமைச்சர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

### போர்க்குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும்

கொழும்பில் வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது பிரிட்டிஷ் அமைச்சர் மில்லிபாண்ட் இலங்கை வெளியுறவுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் கடுமையான வார்த்தையாடலுக்குள்ளானார். இந்தவாரம் லண்டனில் அவர் வெளிப்படையாக வெளியிட்ட ஒரு கருத்தில் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம் "ஒழுக்கக்[illegible]னது, தேவையற்றது" என்றும் அவ[illegible] குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் மத்தி[illegible]கியின் ஆளுநர் நிவார்ட் க[illegible] சர்வதேச நாணய கடன் கிடை[illegible]தில் பிரச்சினை எதுவும் இல்லை எ[illegible] தெரிவித்திருந்தார். ஆனால் இப்போது சுருதியை மாற்றிக் கொண்டு நாணய நிதியத்தின் உதவி கிடைக் காதெனில் அதை சமாளிப்பதற்கு வேறு திட்டம் வைத்திருப்பதாகக் கூறுகின்றார்.

### அரசுக்கும் புலிகளுக்கும் செய்தி

அதிபர் ஒபாமாவின் அறிக்கை போரில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரையுமே நோக்கி விடுக்கப்பட்டதாகும்.

பொதுமக்கள் உள்ள பகுதிகளில் கண்மூடித்தனமாகக் குண்டுவீச வேண்டாம் என்று இலங்கை அரசை அவர் கேட்டுக்கொண்டார். மோதல் இடம் பெறும் பகுதியில் கனரக ஆயுதங்களைப் பாவிப்பதில்லையென்ற உறுதிப்பாட்டை கடைப்பிடிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். இந்த இரண்டு கருத்துக்களும் முக்கியமானவை. ஆனால் அரசின் திரிபுவாத அதிகாரிகள் ஒபாமா அவரது அதிகாரிகளால் தவறாக வழிநடத்தப்பட்டு விட்டார் என்று கூறிக்கொள்கிறார்கள். அரசு மீண்டும் மீண்டும் மறுத்துவந்த போதிலும் நூற்றுக்கணக்கான மக்கள் குண்டுவீச்சில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு இருந்து வருகின்றது.

இன்னொன்று என்னவென்றால் மோதல் இடம்பெறும் இடங்களில் கனரக ஆயுதங்களைப் பாவிக்கமாட்டோம் என்ற உறுதிப்பாட்டை செயல்

## சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியும் இப்போதைக்கில்லை

பெற்றனவா என்பது பற்றிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றார். அத்துடன் இலங்கை கேட்டிருக்கும் நிதி உதவியை சர்வதேச நாணயநிதியம் தாமதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

வெளிநாட்டமைச்சின் சார்பில் கொமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் வெளியுறவு கனிஷ்ட அமைச்சர் பில்ரம்மல் தாக்கல் செய்த அறிக்கையில், இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் உண்மையில் அதிர்ச்சியளிப்பனவாகவுள்ளன. இலங்கையில் பொதுமக்கள் கொல்லப்படுவதில் முடிந்த சம்பவங்கள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளை நாம் ஆதரிப்போம், இதன் மூலம் அங்கு போர்க்குற்றங்கள் நடந்துள்ளனவா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச நாணயநிதிய கடனைத் தாமதப்படுத்துவது மட்டுமல்ல போர்க்குற்றங்கள் பற்றியும் பிரிட்டன் இப்போது பேசத்தொடங்கியுள்ளது. இதே கருத்தை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிங்ரன் வாஷிங்டனில் கடந்த வியாழனன்று வெளியிட்டார். தற்பொழுது சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குக் கடன் வழங்குவது பொருத்தமாகவிருக்காது. இதற்கெல்லாம் இலங்கையின் சார்பில் 'கபினட்' அந்தஸ்தில்லாத தகவல்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனாவே பதில் அளித்தார். பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்து படுத்துவது ஏப்ரல் 27ஆம் திகதி அரசு வெளியிட்ட அறிக்கையில் தாக்குதல் நடவடிக்கைகள் முடிந்துவிட்டன. எனவே இனிமேல் கனரக ஆயுதபாவனை இருக்காது என்று கூறப்பட்டிருந்தது.இதையே அதிபர் ஒபாமா குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகின்றது. உறுதிமொழி வழங்[illegible]பட்டிருந்த போதிலும் கனரக ஆயுத[illegible]ளை பாவிப்பது தொடர்கின்றது என்பதையே ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார். இவை ஆழமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய குற்றச்சாட்டுகள் என்பதில் சந்தேகமில்லை.

சில சர்வதேச ஊடகங்கள் ஒபாமாவின் கருத்தை வியாக்கியானம் செய்கையில் இலங்கை அரசு 'பொய்' சொல்கிறது என்றே அவர் கூறியிருப்பதாகத் தெரிவித்துள்ளன.

புலிகளை ஆயுதங்களைக் கீழே போடும்படியாக ஒபாமா கேட்டுள்ளார். பொதுமக்களைப் போக அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்ட அவர், கட்டாயப்படுத்தி ஆள்களைச் சேர்ப்பதும் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துவதும் கண்டிக்கத்தக்கது என்றும் கூறியுள்ளார்.

உலகின் மிக வல்லாதிக்கமுள்ள ஒரு நாட்டின் அதிபர் இலங்கை தொடர்பாக சில குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். அவை பற்றிய சாதக பாதகத் தன்மைகளைப் பற்றி அலசாது போனாலும் அவைகளில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை உய்த்துணர வேண்டும். (ப)

## கனிமொழி, அழகிரி, தயாநிதிக்கு அமைச்சர் பதவி வழங்கப்படுமா?

சென்னை, மே 18

மாநிலங்களவை உறுப்பினர்களான கனிமொழி, மதுரை அழகிரி, தயாநிதி மாறன் ஆகியோர் மத்திய அமைச்சரவையில் இடம்பெறுவார்களா என்ற கேள்விக்கு, பொறுத்திருந்து பாருங்கள் - என்று பதில் அளித்தார் முதல்வர் கருணாநிதி.

மக்களவைத் தேர்தலில் தமிழகம், புதுவையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 28 இடங்களில் வெற்றி பெற்ற பின்னர், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு முதல்வர் பேட்டி அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியின் வெற்றி நான் எதிர்பார்த்த ஒன்று தான். தி.மு.க. மக்களவை உறுப்பினர்களின் கூட்டம் சென்னையில் திங்கட்கிழமை (இன்று) நடைபெறுகிறது. அமைச்சர் ஸ்டாலினின் மிகச் சிறந்த தேர்தல் பிரசாரம் காரணமாகவே தி.மு.க. கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது. எனவே அமைச்சர் ஸ்டாலினுக்கு முதல்வர் பதவி அளிக்கப்படுமா எனக் கேட்கிறீர்கள்.

அமைச்சர் ஸ்டாலின் தனக்கு உரிய இடத்தை ஏற்கனவே கட்சித் தொண்டர்களிடம் பெற்றுள்ளார். நான் முதல்வராக இருப்பதால், அவரை முதல்வராக்குவது என்ற கேள்வியே எழவில்லை - என்றார்.

### நாளை

| | |
|---|---|
| வைகாசி 05 | 19.05.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ.11.55வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | மு.இ.08.57 வரை |
| [illegible] | 10.22 - 11.52 |
| ராகுகாலம்: | 02.52 - 04.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 256 தொகுதிகளைக் கைப்பற்றி காங்.கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு

## பா.ஜ.க. - 161, 3 ஆவது அணி - 68, 4 ஆவது அணி - 28

புதுடில்லி, மே 18

இந்தியா முழுவதும் பரபரப்பாக எதிர் பார்க்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப் பட்டன.

இறுதியாக அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி, ஐக்கிய முற்போக்கு கூட் டணி 256 இடங்களைக் கைப்பற்றி தனிப் பெரும் கூட்டணியாக வெற்றி பெற்றது. பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநா யக கூட்டணி 161 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

மாநிலக் கட்சிகள் மற்றும் இடதுசாரி கட் சிகள் பிரதானமாக அங்கம் வகிக்கும் 3ஆவது அணிக்கு தென் மாநிலங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. மொத்தத்தில் 3ஆவது அணிக்கு 68 இடங் கள் கிடைத்திருந்தன.

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து பிரிந்த லாலுவின் ராஷ்டிரீய ஜனதா தளம், பஸ்வானின் லோக் ஜனசக்தி மற்றும் முலா யம்சிங்கின் சமாஜ்வாடி ஆகிய கட்சிகள் இணைந்த 4ஆவது அணி 28 இடங்களி லும், இதர கட்சிகள் 30 இடங்களிலும் வெற்றி பெற்றன.

தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில், தி.மு.க. தலைமையிலான கூட்டணி 28 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்த அணியில் தி.மு.கவுக்கு 18 தொகுதிகளும், காங்கிரஸுக்கு 9 தொகுதிகளும், விடுதலைச் சிறுத்தை களுக்கு ஒரு தொகுதியும் கிடைத்தன.

அ.தி.மு.க. தலைமையிலான கூட் டணி 12 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதில் அ.தி.மு.கவுக்கு மட்டும் கிடைத்த இடங்கள் 9. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந் திய கம்யூனிஸ்ட், ம.தி.மு.க. ஆகிய கட்சி களுக்கு தலா ஒரு இடமும் கிடைத்தன.

காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்க ளில் வெற்றி பெற்று முன்னணியில் இருப்பதால், அந்த அணி மத்தியில் மீண் டும் ஆட்சியைப் பிடிப்பது உறுதியா னது.

பெரும்பான்மைக்குத் தேவையான 272 இடங்கள் கிடைக்காவிட்டாலும் மற் றக் கட்சிகளின் ஆதரவுடன் காங்கிரஸ் கூட்டணி அரசு அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆட்சி அமைப்பது குறித்து காங்கிரஸ் கட்சி தலைவர்கள் முதலில் கூடிப்பேசிய பின், கூட்டணிக் கட்சிகளான தேசியவாத காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கி ரஸ் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத் தப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் மற் றொரு பொதுச்செயலாளரான பிருதிவிராஜ் சவான் தெரிவித்தார்.

தேவைப்பட்டால் சுயேச்சைகள் மற் றும் சிறிய கட்சிகளின் ஆதரவை நாடுவோம் என்று கூறிய அவர், ஆட்சி அமைப்பதற்கு இடதுசாரிகளின் ஆதரவு தேவை இருக் காது என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

4 அல்லது 5 சுயேச்சை உறுப்பினர் களுடன் ஐக்கிய ஜனநாயக முன்னணி, ராஷ்டிரீய லோக் தளம், மதச்சார்பற்ற ஜனதா தளம் போன்ற சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஒரு வர் தெரிவித்தார்.

இந்நிலையில், தேர்தல் முடிவுக்குப் பிந்திய நிலைமை பற்றி விவாதித்த பின்னர், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம்.பிகள் இன்று திங்கட்கிழமை டில்லியில் கூடி, பிரதமராக மன்மோகன் சிங்கை மீண்டும் தேர்ந்து எடுக்கிறார்கள். அதன்பின்னர் மன்மோகன் சிங், ஜனாதி பதி பிரதீபா பட்டீலை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோருகிறார்.

தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியாவை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்து பேசினார்.

மேலும் காங்கிரஸ் வரலாற்றிலேயே, தேர்தலுக்கு முன்பே பிரதமர் வேட்பாளர் என்று முதன் முறையாக அறிவிக்கப்பட் டவர் என்ற பெருமையும் மன்மோகன் சிங் குக்கு கிடைத்துள்ளது.

இந்தத் தேர்தலில், கேரள மாநிலத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த இடதுசாரிக் கட்சி கூட்டணியை வீழ்த்தி காங்கிரஸ் கட்சி வெற்றிவாகை சூடியது.

டில்லியில் மொத்தம் உள்ள 7 தொகுதி களிலும் அமோக வெற்றி பெற்ற காங் கிரஸ், ஆந்திரா, மராட்டியம், ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் சிறப்பான வெற்றியை பெற்றது. 80 தொகுதிகளை கொண்ட உத்தரப்பிரதேசத்தில், கடந்த தேர்தலில் 10 இடங்களை மட்டுமே கைப்பற்றிய காங்கிரஸ், இந்த தேர்தலில் 21 இடங் களை கைப்பற்றி இரட்டிப்பு வெற்றி பெற் றமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியத் தேர்தல் இறுதி முடிவுகள்

அகில இந்தியத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | 2009 | 2004 |
|---|---|---|
| மொத்த ஆசனங்கள் | 543 | 543 |
| காங்கிரஸ் கூட்டணி | 256 | 275 |
| பா.ஜ.க. கூட்டணி | 161 | 185 |
| 3.ஆவது அணி | 68 | - |
| ஏனைய கட்சிகள் | 58 | 146 |

தமிழகத் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | 2009 | 2004 |
|---|---|---|
| தி.மு.க. கூட்டணி | 27+1 | 40 |
| தி.மு.க. | 18 | 16 |
| காங்கிரஸ் | 09 | 13 |
| விடுதலைச்சிறுத்தைகள் | 01 | - |
| அ.தி.மு.க. கூட்டணி | 12 | - |
| அ.தி.மு.க. | 09 | - |
| ம.தி.மு.க. | 01 | 04 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 01 | - |
| மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் | 01 | - |

# வீழ்ந்து கிடக்கும் உறவுகளுக்கு எம்மாலியன்ற வகையில் உதவி செய்து உயிர் கொடுக்க முனைய வேண்டும்

## மாவை.சேனாதிராஜா அறிக்கை



எமது உணவில், உழைப்பில்,உப்பில் ஒரு பிடியையேனும், அல்லலுற்று ஆற் றாது, அழுத கண்ணீ ருடன் வீழ்ந்து கிடக் கும் எம் உறவுகளுக்கு உதவி, உயிர் கொடுப் போம் -என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றுமுன்தினம் அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு:-

எம் உடன் பிறப்புக்கள் குறிப்பாகக் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக முன் னெப்பொழுதுமில்லாத அளவுக்கு வன்னி மண்ணில் மனிதப் பேரவலத்தில், அழி வின் விளிம்பில் வீழ்ந்து கிடப்பதை அறி வீர்கள்.

கடந்த ஐந்து மாதங்களுக்கிடையில் பத்தாயிரத்திற்கும் அதிகமான எம்மின மக்கள், பெண்கள், குழந்தைகள், முதிய வர்கள், விமானக்குண்டு வீச்சுக்களுக் கும், ஏவுகணைகள்,எறிகணைகள் என்ப வற்றின் தாக்குதல்களுக்கும் உள்ளாகி மாண்டுவிட்டனர்.

இருபதாயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயங்களுக்குள்ளாகிக் குற்றுயிராய்க் கிடக்கின்றனர். பல இலட்சம் மக்கள் பல வந்தமாக இடம்பெயர வைக்கப்பட்டு பரி தவிக்கின்றனர். எம் தமிழ்ப் பெண்கள் படுங் கொடுமைகளும் அவமானங்களும் சொல் லில் அடங்கா, இக்கொடிய நிலை தொடர் கின்றது.இது நாம் சொல்வது மட்டுமல்ல. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் வெளியீடுமாகும்.

உழைத்து வாழ்ந்த எம்மக்கள் இன்று உணவின்றி, மருந்தின்றி ஓடாகிச் செத்து மடிகின்றனர். எஞ்சியோர் ஒருவேளை கஞ் சிக்குக் கூடக் கையேந்தி நிற்கும் நிலை நீடிக்கிறது.

எங்கள் உழைப்பும்,வரிப்பணமும் எம் தேசத்தையும்,எம் மக்களையும் அரசியல் அடிமைகளாக வைத்திடவும் அல்லது பூண்டோடு அழித்திடவும் இலங்கைச் சிங் கள அரசுக்கு துணையைக் கொடுத்திருக் கின்றன.

சர்வதேச சமூகமே ''போரை நிறுத்தி விட்டுத் தமிழர் உயிர்களுக்கு உத்திரவாத மளிக்க வேண்டும். தமிழர் தம்மை ஆளும் அரசியல் உரிமைக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்'' என்ற போதிலும் இலங்கை அரசு அதிகார ஆணவத்துடன் எம் தமிழ் இனத்தை அழித்து விட்டு, தமிழ்நிலத்தை யெல்லாம் ஆக்கிரமித்துப் பௌத்த, சிங்க ளக் கொடியைப் பறக்க விடக் கங்கணங் கட்டி நிற்கிறது.

ஐந்து தசாப்தங்களுக்கு மேலான தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தின் பின் னரும் அரசியல் தீர்வுமின்றி உயிர் வாழும் உரிமையுமின்றி துடிதுடித்துச் சாகின்றோம் நாம் மட்டுமல்ல நாடே சீரழிக்கப்படுகின் றது. இத்தனை காலமும் எம் மக்கள் எத் தனை அளப்பரிய தியாகங்களைச் செய்து விட்டார்கள்.

### கொள்கைக்காக அர்ப்பணித்தவர்கள் அலைந்து நிற்கிறார்கள்

'' தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரை கண்ணீரால் காத் தோம் கருகத் திருவுளமோ? எண்ணமெல் லாம் நெய்யாக எம்முயிரினுள் வளர்ந்த வண்ண விளக்கிது மடியத் திருவுளமோ'' எனச் செக்கிழுத்த சிதம்பரனார் பாரத விடு தலைக்காகச் சிறைக்குள் வீழ்ந்து கிடந்த போது பாரதியார் பாடிய திருவடிகள் தான் நினைவுக்கு வருகிறது.

ஒரு கொள்கைக்காக தமிழின விடுதலை என்ற இலட்சியத்துக்காக அர்ப்பணித்து நின்ற தமிழர்கள் ஆவியாய் அலைந்து நிற் கிறார்கள்.

அவர் தம் உறவுகள் அடிமையாக சிறைக்கூடத்திலும் கொடிய அடக்குமுறைக் கூடாரங்களுள் வீழ்ந்து கிடக்கின்றனர். ஹிட்லர் காலத்து யூதச் சிறைக்கூடங்கள் போல இராணுவக் காவலும், காட்டிக் கொடுத்துப் பிழைப்போர் கூட்டங்களும் சூழ்ந்து நிற்கின்றன.

கையில் காசுமின்றி, நோய்க்கு மருந்து மின்றி, குழந்தைகளுக்கு பாலுமின்றி உடுக்க மாற்றுத் துணியுமின்றி பட்டினி யால் சாகும் எம் தமிழ் உறவுகளை காத்து நிற்கும் பொறுப்பு எமக்குண்டு.

அவர்களின் எதிர்கால வாழ்வுக்கும் விடி வுக்குமாக இராஜதந்திர வழிகளில் சர்வதேச சமூகத்திடம் உதவி கேட்டு வருகிறோம். புலம் பெயர்ந்த எம் தமிழர் உதவிக் கரம் நீட்டி நிற்பதறிவோம்.

எம்மினத்தை கொன்று குவிப்பவர் களே உலகத்திடம் தமக்கு உதவி கேட்டு நிற்கிறார்கள். எதற்காக? உங்கள் சொந்த இரத்த உறவுகளோ நாங்களோ தானும் உங்களைச் சந்தித்து பேசுவதற்குக் கூட அரசால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இப் படி யும் ஒரு நாசிசம் நாட்டில் பரவியுள்ளது.

எனவே தான் நாமெல்லாம் எம் மண் ணின் இராணுவமயச் சூழலில் திறந்த வெளிச் சிறைக்கைதிகளாக இருந்தாலும் எமது உழைப்பில், எமது உணவில், எமது உப்பில், ஒரு பிடியையேனும் அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணீருடன் வீழ்ந்து கிடக்கும் எம் உறவுகளுக்கு உதவி உயிர் கொடுப்போம்.

எம் தமிழ் மக்களின் விடிவுக்காக நாளும் பிரார்த்தனையிலீடுபடுமாறும் வேண்டு கோள் விடுக்கிறோம் - என்றுள்ளது.

# தமிழ் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு ஒபாமாவின் யோசனைக்கு அமைவாகச் செயற்படத் தயார்

## விடுதலைப்புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் தெரிவிப்பு

வன்னியில் தமிழ் மக்கள் எதிர்கொண் டுள்ள பேரவலமான நிலைகுறித்து தமி ழீழ விடுதலைப் புலிகள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். இந்த அவலங்களை உடனடியாக நிறுத்துவதற்கு தேவை யான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நாம் தயாராக உள் ளோம். எனவே அமெரிக்க அரச தலைவரி னால் கூறப்பட்ட வழிகளில் அமைதியை காண்பதற்கு எமது ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக உள்ளோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக விவ காரங்களுக்கான பொறுப்பாளர் செல்வ ராஜா பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் விடுத்துள்ள அறிக் கையை இணையத்தளங்கள் வெளியிட் டுள்ளன.அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:-

வன்னியில் தமிழ் மக்கள் எதிர்கொண் டுள்ள பேரவலமான நிலைகுறித்து விடு தலைப் புலிகள் ஆழ்ந்த கவலை கொண் டுள்ளனர். இந்த அவலங்களை உடனடி யாக நிறுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வதற்கு நாம் தயாராக உள்ளோம்.

மனிதப் பேரவலத்தை நிறுத்துமாறு அமெரிக்க அரச தலைவர் விடுத்த வேண்டு கோளை விடுதலைப் புலிகள் செவிமடுத் துள்ளனர். அதற்கு அமைவாகச் செயற் படுவதற்கு இணங்கியுள்ளனர்.

அனைத்துலக சமூகம் நியாயமாகவும் திறந்த மனதுடனும் செயற்பட வேண்டும் என்பதுடன், இரக்கமற்ற முறையில் வன் முறைக்கு இலக்காகும் மக்கள் தொடர்பில் முழுமையான பொறுப்புக்களையும் எடுக்க வேண்டும்.

எமது மக்கள் அனைத்துலக சமூகத்தின் ஆதரவை எதிர்பார்த்துள்ளனர். எமது மக் களின் எதிர்காலம் தொடர்பான முழுப் பொறுப்பையும் அனைத்துலக சமூகம் பொறுப்பேற்க வேண்டும்.

அமெரிக்க அரச தலைவரின் கோரிக் கையை சிறிலங்கா அரசும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதுடன், இரத்தக் களரியை தடுப்பதற்கான எல்லா நடவடிக் கைகளையும் அது மேற்கொள்ள வேண் டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அமெரிக்க அரச தலைவரின் அண் மைய கருத்து எமக்கு நம்பிக்கையை ஏற் படுத்தியுள்ளது. எனவே எமது மக்களின் நெருக்கடியான இந்த நிலையில் அவர் காத்திரமான பங்களிப்பை ஆற்ற முடியும்.

தற்போதைய மோதல்களை படைத் துறை வழியிலான தீர்வின் மூலம் நிறுத்த முடியாது. எமது மக்களுக்கு தேவையான கௌரவமானதும், சமத்துவமானதுமான இறுதியான தீர்வு அரசியல் வழிமுறை களின் மூலம் தான் எட்டப்பட முடியும்.

எல்லாத்தரப்பும் உண்மையுடன் நடந்து கொள்ளும் பட்சத்தில் அரசியல் வழி முறை களில் இணைந்து கொள்வதில் எமக்குள்ள ஈடுபாடுகளை நாம் ஏற்கனவே வெளிக் காட்டி வந்துள்ளோம்.

அமெரிக்க அரச தலைவரின் வார்த் தைகள் நம்பிக்கை தருவதாக அமைவத னால் நடுநிலையான அனைத்துலக கட் சிகளின் அனுசரணையுடன் அரசியல் நீரோட்டத்தில் விடுதலைப் புலிகள் இணைந்து கொண்டு இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக்காண மீண்டும் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தீவில் வாழும் மக்கள் அனைவருக்கும் இரு ஒரு நல்ல சந்தர்ப் பம். நாமும் சிறிலங்கா அரசும் இணைந்து இனப்பிரச்சினைக்கான தீர்வை காண வேண்டும்.

அரசின் தற்போதைய நடவடிக்கை மேலும் பல ஆயிரம் மக்களின் படுகொலை களுக்கே வழிவகுக்கும். அது கௌரவ மான தீர்வுக்கு வழிவகுக்கப்போவ தில்லை.

எனவே ஒபாமாவினால் கூறப்பட்ட வழிகளில் அமைதியைக் காண்பதற்கு நாம் எமது ஒத்துழைப்புக்களை வழங்க தயாராக உள்ளோம் - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற "மருத்துவ நோக்கில் மரணக் கிரியைகள்" நூல் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யாழ்.மாநகரசபை பிரதம சித்த மருத்துவ வைத்திய அதிகாரி ப.சுரேசன், யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் திருமதி. தி.பஞ்சராசா, சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களில் காணலாம்.
யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி பொன்.இராமநாதனிடமிருந்த நாலின் முதற் பிரதியை யாழ்.சைவபரிபாலனசபைத் தலைவர் த.சண்முகலிங்கம் பெற்றுக் கொள்வதையும் நூலாசிரியர் வைத்திய கலாநிதி கே.சிவசண்முகராஜாவையும் நான்காவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# புதிதாகக் காணி கொள்வனவு செய்ய விரும்புவோர் சோலைவரியில் அதன் பதிவை உறுதிப்படுத்த வேண்டும்

## வலி.கிழக்கு பிரதேசசபை அறிவுறுத்து

கோப்பாய், மே 18

புதிதாகக் காணி கொள்வனவு செய்ய விரும்புவோர் குறித்த காணி பிரதேச சபையின் சோலைவரிப் பதிவேட்டின்படி உரியவர்களின் பெயரில் பதியப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்த பின்னர் கொள்வனவு செய்ய முன்வரவேண்டும்.

இதன்மூலம் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேசசபை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

வலி.கிழக்கு பிரதேசசபையால் அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் உபபணிமனை எல்லைகளுக்குள் வசிக்கும் பொதுமக்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

காலதாமதங்கள், வீண்விரயங்கள் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

* தங்கள் காணிகளுக்குரிய சோலை வரியினை குறித்த ஆண்டு தொடக்கத்தின் ஜனவரி 31 இற்கு முன்னதாகச் செலுத்துவதன் மூலம் 10 வீதக் கழிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.
* காணி உரிமையாளர்கள் தமது காணி பிரதேச சபை உபபணிமனையில் உள்ள சோலைவரிப் பதிவேட்டில் தமது பெயரில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். இல்லாவிடத்து உரிய விண்ணப்பப் படிவத்தை பெற்று மாற்றம் செய்து கொள்ளவும்.
* புதிதாகக் கட்டிடம், மதில், மலசல கூடம், கிணறு ஆகியவற்றை அமைப்பதற்கோ, கட்டிடம் திருத்தம் செய்து கொள்வதற்கோ பிரதேச சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
* வியாபார உரிமையாளர்கள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார உரிமத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
* தொழிற்சாலைகள், கல்லுடைக்கும் ஆலைகள் (கிறேசர்கள்), அரைக்கும் ஆலைகள், உணவுச் சாலைகள், வெதுப்பகங்கள், வாகனச்சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றுக்கு உரிய காலத்தில் சுற்றுச்சூழல் அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும் போன்ற.- அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. (203-72)

# ஆனைக்கோட்டை பகுதியில் அன்பிய எழுச்சிவாரம் அனுஷ்டிப்பு

ஆனைக்கோட்டை, மே 18

ஆனைக்கோட்டை, நவாலி தேவர் கட்டு பகுதி மக்களால் அன்பிய எழுச்சி வாரம் கடந்த ஒரு வார காலமாக அனுஷ்டிக்கப் பட்டது.

அயலவர்கள் ஒன்று கூடுவோம் அன்பியமாக மாறுவோம் என்னும் தொனிப் பொருளில் இந்த எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

மறைமாவட்ட அன்பிய ஒருங்கமைப்பாளர், ஆனைக்கோட்டை பங்குத் தந்தை ஆகியோரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்பிய வார நிகழ்வுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இப்பங்கைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் இது தொடர்பான நிகழ்வுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-20)

# ஒருசில ப.நோ.கூ. சங்கங்களில் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை

## சங்கங்களுக்குப் பொருள்கள் வழங்கப்படாமையே காரணம்

யாழ்ப்பாணம், மே 18

கடந்த ஏப்ரல், மே மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணங்கள் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை வ்ழங்கப்படாமையால் சமுர்த்திப் பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு பிரதேச செயலகங்கள் அறிவித்தும் கூட கூட்டுறவுச் சங்கங்கள் சில இதுவரை அவற்றை விநியோகிக்கவில்லை என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். செயலகத்திற்கு வழங்க வேண்டிய அரசகடன்களைச் செலுத்தினால் மட்டுமே இந்த நிவாரணத்திற்குப் பொருள் வழங்கப்படும் என செயலகம் நிபந்தனை விதித்துள்ளது.

சமுர்த்தி நிவாரணத்தை வழங்காமையால் பயனாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதோடு கவலையும் விசனமும் தெரிவித்துள்ளனர். (203-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மாகாணமட்ட மென்பொருள் ஆக்கப் போட்டி

கோப்பாய், மே 18

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு மாகாண மட்ட கணனி மென்பொருள் ஆக்கப் போட்டி நடைபெறவுள்ளது.

மாணவர் பிரிவுகள் பிரிவு ஒன்றில் ஒன்று தொடக்கம் 5 வரையும், பிரிவு 2 இல் 6 தொடக்கம் 8 வரையும், பிரிவு 3 இல் 9 தொடக்கம் 11 வரையும், பிரிவு 4 இல் உயர்தர வகுப்பு மாணவருக்கும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி பிரிவு மாணவர்கள் கற்றலுக்குப் பயன்படும் விதத்தில் தாம் கற்கும் எப்பாடத்திலும் மென்பொருள் ஒன்றை ஆசிரியர் வழிகாட்டலுடன் உருவாக்கி அதனை இறுவட்டில் பதிந்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. ஒரு மாணவர் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம். ஆசிரியர் பிரிவு ஒன்றில் ஒன்று தொடக்கம் 5 ஆம் வகுப்பு வரை, பிரிவு இரண்டில் 6 தொடக்கம் 11 ஆம் வகுப்பு வரை, பிரிவு மூன்றில் இல் உயர்தர வகுப்பில் போட்டிகள் இடம்பெறும்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் மேற்படி பிரிவு ரீதியாக கற்பித்தலுக்கு பயன்படும் விதத்தில் எப் பாடத்திலும் மென்பொருள் ஒன்றை உருவாக்கி இறு வட்டில் பதிந்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஓர் ஆசிரியர் எத்தனை இறுவட்டுக்களையும் அனுப்பலாம்.

பயிற்சி பெற்ற அனைத்து ஆசிரியர்களும் போட்டியில் பங்குபற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போட்டிக்கான முடிவுத்திகதி அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஆகும். இதுகுறித்த சுற்று நிருபங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (203-72)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் குருதிக்கொடையாளர் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம் மேற்படி கல்லூரியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.
இரத்ததானம் வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்களைப் படத்தில் காணலாம்.

# நூலகவார நிகழ்வுகள்

மண்டுவில், மே 18

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தினரால் நூலகவார நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபைத் தலைவர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி பிரேமினி சபாரட்ணம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராகக் கொடிகாமம் மந்துவில் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை அதிபர் சி.பவனேந்திரன் கலந்து கொள்வார்.

பொதுமக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களின் கண்காட்சியும் உள்ளூர் எழுத்தாளர் செல்வி.பி.சபாரட்ணம் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும் என்று சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (203-54)

# பிரதேச சபையின் நடமாடும் சேவை

கோப்பாய், மே 18

வலி.கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உபபணிமனையின் நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயிலடியிலும் அச்சுவேலி உபபணிமனையின் நடமாடும் சேவை அச்சுவேலி தெற்கு சிவன் கோயிலடியிலும் நடைபெறவுள்ளன.

இச் சேவை மூலம் அடிப்படைக் கட்டுமான வசதிகள் தொடர்பான ஆலோசனைகள், ஆதனங்கள் சரிபார்த்தல், பிரதேசத்தில் உள்ள மக்களின் குறைகள் கேட்டறிதல் ஆகியவற்றைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்களை மேற்படி சேவையில் இணைந்து பயன் பெறுமாறு பிரதேச சபையினர் கேட்டுள்ளனர். (203-72)

# பற்றைக்குள் இருந்து கசிப்பு, உபகரணம் மீட்பு

வலி.வடக்கு, மே 18

ஏழாலைப் பகுதியில் உள்ள பற்றைக் காணியில் இருந்து பெருந்தொகையான கசிப்பு உற்பத்தி உபகரணங்கள், கசிப்பு, இரண்டு பரல்கள், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா ஆகியவற்றைச் சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி லுடாவை தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் மீட்டுள்ளனர்.

கடந்த வாரம் ஏழாலை, பொக்கணை, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் இருந்து மூன்று உழவுயந்திரத்தில் கசிப்பு, கசிப்புக் காய்ச்சும் உபகரணங்கள், கோடா என்பவற்றைக் கைப்பற்றியதுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏழாலைப் பகுதியில் பொலிஸார் கசிப்புக் காய்ச்சும் இடத்தில் இப் பொருள்களைக் கைப்பற்றியுள்ள போதிலும் இதனுடன் தொடர்புடையவர்கள் தப்பி ஓடியுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச மருத்துவமுகாம்

மானிப்பாய், மே 18

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 92 வயோதிபருக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனமும், மானிப்பாய் சத்தியசாயி நிறுவனமும் இணைந்து மேற்படி இலவச மருத்துவமுகாமை நடாத்தின.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 7 வைத்திய நிபுணர்கள் இவ் இலவச மருத்துவ முகாமை நடத்தினர்.

வலி.தென்மேற்கு மத்தி முதியோர் சங்கத்தின் வேண்டுகோளினைத் தொடர்ந்தே இந்தச் சிகிச்சை முகாம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கான மருத்துவ உதவிகளை வடபிராந்திய சத்தியசாயி நிறுவனத் தலைவர் இரா.வசந்தசேனன் வழங்கியிருந்தார்.

(203-95)

# 6 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



உடுப்பிட்டி, வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த

*ஜீவராஜா- பிரியா*

தம்பதியரின் செல்வப் புதல்வன் **நட்ரேஷ்** தனது ஆறாவது பிறந்தநாளை இன்று (18.05.2009) திங்கட்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை லண்டனில் வசிக்கும் அப்பா ஜீவராஜா, பூவப்பம்மா, ஜெயாமாமா, வீரபத்திரர் கோயிலடியில் வசிக்கும் பேபி தாத்தா, நவம் அப்பம்மா, கிரி அத்தை, கிருஷ்ணா அத்தை, தவம் தாத்தா, கமலம் அம்மம்மா, சுகி சித்தி ,சிந்து சித்தி, அபி சித்தி, சிறிமாமா மற்றும் கனடாவில் வசிக்கும் கோபி சித்தப்பா, மாலா சித்தி, அவுஸ்ரேலியாவில் வசிக்கும் சோபி அத்தை, கொழும்பில் வசிக்கும் ரகுமாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நட்ரேஷ் குட்டியை வீரபத்திரர் துணைகொண்டு பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

18 . 05 . 2009



தகவல்:
தவம் தாத்தா,
பேபி அப்பப்பா.
வீரபத்திர கோயிலடி,
உடுப்பிட்டி.

(அ.55649)

**செல்வன் ஜீவராஜா நட்ரேஷ்**

# மாகாணத்திற்கு தெரிவானோர்

மண்டுவில், மே18

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றிபெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவானோரின் விவரம் வருமாறு:

எம்.வினோசா (மட்டுவில் மகா வித்தியாலயம்), எம்.றஜிகரன் (மட்டுவில் மகாவித்தியாலயம்), ஏ.திலானி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), எம்.கஜேந்தினி (வரணி மகாவித்தியாலயம்), எஸ்.நிசாந்தினி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), எஸ்.கஜன் (மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்).

வி.நிதர்சன் (மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.), ஏ.டிசிந்தா (மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்), எம்.டிக்சன் (மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்), என்.நிலானி (மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்), என். மாதங்கி (மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்), எம்.கலாவினோதன் (மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்).

எஸ்.சோபிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்தியாலயம்), ஆர்.கிருஷாந்தி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.தயாளினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.செல்வராஜ் (கச்சாய் அ.த.க.பாடசாலை), கே.வண்ணமதி (கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை)

(203-59)

# பெண் சாரணிய வழிகாட்டுநர் கூட்டம்

யாழ்ப்பாணம், மே18

யாழ்.மாவட்ட பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பெண்சாரணிய வழிகாட்டுநர்கள் அனைவரையும் இதில் சமூகமளிக்குமாறு யாழ்.மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(203)




ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!
நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும்
யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கிலாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்,நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

*Manufactured By:*
**Luckyland**
*Biscuit Manufactures*
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு: 15.03.2008
திதி: நவமி



தோற்றம் 17.01.1961
மறைவு: 27.06.2008
திதி: தசமி

**தர்மலிங்கம் பொன்னம்மா தர்மலிங்கம் நாகேஸ்வரன்**

அன்புள்ளம் கொண்ட தெய்வங்களே!- நீங்கள்
மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்- உங்கள்
அன்பையும், பாசத்தையும் அரவண்ணப்பையும்
எப்படி மறப்போம்- உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(85354)

என்றும் நினைவுடன்:


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1087 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம்

20 21 22 53

15-05-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,931,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 202,681 | 20/- | 4,053,620/- |
| 2 இலக்கங்கள் | 18,625 | 40/- | 745,000/- |
| 1 இல. + லக்கினம் | 18,576 | 60/- | 1,114,560/- |
| 2 இல. + லக்கினம் | 1,674 | 200/- | 334,800/- |
| 3 இலக்கங்கள் | 513 | 1000/- | 513,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,931,400/- | - |
| மொத்தம் | | | 7,820,980/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 242,123 | | 8,320,980/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,837,000/-

2009 மே 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
நில நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச்
செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத் டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 500152837-2-38 |
| மாத்தளை | 500138620-5-19 |
| கண்டி | 500145430-2-28 |
| அம்பாறை | 500144246-0-22 |
| கேகாலை | 500141746-4-42 |


# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை**
D-10, உருத்திரபுரம்

பிறப்பு - 16★12★1906
இறப்பு - 18★05★1984

இருபத்தைந்து ஆண்டுகள்
பார்த்திருக்கப் போனதையா
பாசத்தை எமக்களித்து
பண்பாக வழிநடத்தினீர் - அந்த
நேச நினைவலைகள்
நெஞ்சைவிட்டு நீங்கவில்லை

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

*அலுக்கை,*
*அளவெட்டி.*

(85319)

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் பாதம் பணிந்து
"ஸ்ரீ ஞானா"

தவப்பேறு
11 . 01 . 1960



சிவப்பேறு
03 . 06 . 1994

**திருமதி ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி B.A. (HONS)**
(ஆசிரியை)
திதி: 18.05.2009

ஞானா!
"இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே"


28. கைலாயபிள்ளையார்
கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (85349)

நினைவுடன்:
அன்புக் கணவர், சகோதரி குடும்பம்,
மாமி, மைத்துனர்கள், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியும் ஆஸ்துமா நோயும்








கேள்வி: சமீபத்தில் ஒரு பத்திரிகையின் மருத்துவப் பகுதியில் - தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா (Asthma) நோய் ஏற்படும் சாத்தியம் அதிகம் என்று வாசித்தேன். இது உண்மையா? குழந்தைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சி களை மிகவும் ரசித்துப் பார்க்கின்றார்கள். பாதிப்பு ஏற்படாமல் தொலைக்காட்சி பார்ப்பதற்கு வழி உண்டா?

பதில்: ''எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். பாடியவன் பாட்டைக் கெடுத்தான்'' என்ற மாதிரி - நடந்த ஒரு சிறு ஆய்வின் முடிவை வைத்துக்கொண்டு வாந்தியெடுத்ததை காகங்கள் தின்ற கதை வாய்வழியாக சென்று முடிவில் காகம் காகமாக வாந்தியெடுத்ததாக வந்த மாதிரி இந்த சாதாரண விஷயம் பெரிதாக்கப்பட்டு விட்டது. நடந்த உண்மை இதுதான். அமெரிக்காவில் 3000 குழந்தைகள் மத்தியில் நடந்த ஆய்வின் போது $3^1/2$ வயது வரை ஆஸ்துமா நோய் சற்றேனும் இல்லாத குழந்தைகளில் 6 வீதமானோர் (கவனமாக நினைவுகொள்க) மட்டும் அவர்களது 11 வயது காலகட்டத்தில் ஆஸ்துமா நோயால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் தினமும் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர் களாக இருந்தார்கள். நீண்ட நேரம் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்க்கும்போது குழந்தை களின் வளர்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் சுவாசப்பை விருத்தி பெறாமல், சுவாசிக்கும் முறைகளில் மாற்றம் ஏற்பட்டு ஆஸ்துமா நோய்க்கு வழிகோலுகிறது என்று ஆய்வாளர்கள் அனுமானம் வெளியிட்டார் கள். இந்த 6 வீதமுடிவு தொலைக்காட்சி பார்ப்பதால் ஆஸ்துமா ஏற்படலாம் என்று ஊடகங்களில் அரை குறையாக வெளியிடப் பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின் முடிவுகள் ஒருவகையில் சரியாக இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில், Sedentary என்று சொல்லப்படுகின்ற ஓய்வுநிலை வாழ்க்கை முறை - எதுவித உடல் உழைப்பும் இல்லாத வாழ்க்கை முறை - சுவாசப்பை பிரச்சினைகளுக்கு மட்டுமல்ல இதயநோய், நீரிழிவு நோய் என்பவற்றுக்கும் கால்கோளாகின்றது. தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதும் ஓய்வுநிலை வாழ்க்கை முறைதான். அலுவலக சேவையாளர்களும் (Office Workers) ஒருவகை ஓய்வுநிலை வாழ்க்கைக்கு உட்பட்டவர்களே! மொத்தத் தில் - ஒரே இடத்தில் ஓய்வுநிலை வாழ்க்கை முறையில் வாழ்வதால் கூட - நோய்கள் ஏற்படும் என்பதை மனதில்கொள்க தொலைக்காட்சி மட்டும் தான் இதற்கு காரணம் அல்ல.

இனி, உங்கள் வினாவின் அடுத்த பகுதிக்கு வருவோம். தொலைக்காட்சி பார்ப்பதால் நன்மை, தீமை இரண்டும் உண்டு. பொதுவாக குழந்தைகள் விஷயத் தில் தொலைக்காட்சி பார்ப்பது பற்றி இங்கு எடுத்து கூறுகின் றேன். பெரியவர் களுக்கும் இதில் எடுத்துக் கொள்ள விஷயங்கள் உண்டு. சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி இரண்டு வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் சராசரி ஒருவாரத்தில் ஒரு நாள் கால அளவை தொலைக்காட்சியில் செலவிடு வதாக அறியப்பட்டுள்ளது. அநேகமாக இந்த வயது காலகட்டத்தில் குழந்தைகளை வீட்டில் அதிக நேரம் தனியே விட்டு கணவனும் மனைவியும் வேலைக்கு போய் விடுகின்றார்கள். அவர்கள் வீட்டில் இருந்தாலும் கூட குடும்பத்தின் பொழுது போக்கு தொலைக்காட்சியில் விடுகிறது. இந்தியாவில் நடந்த கணக்கீட்டின்படி குறைந்தது தினமும் 7 மணிநேரம் ஒவ்வொரு வீட்டிலும் தொலைக்காட்சி இயங்கிக் கொண்டிருக்கிறது. தொலைக் காட்சி பார்ப்பது - Passive Event எனப் படும். எதுவித இயக்கமும் இல்லாத செயல்பாடு. தொலைக்காட்சி பார்க்கும் போது - 'நான் அசைத்தால் அசையும் அகிலமெல்லாமே' என்று திருவிளை யாடல் படத்தில் சிவாஜி பாடும்போது - உலக இயக்கங்கள் அசையாது நின்று விடுவது போல் - தொலைக்காட்சி பார்க்கும்போது வீட்டின் இயக்கங்கள், பார்ப்பவர்களின் இயக்கங்கள் எல்லாம் அப்படியே நின்றுவிடு கின்றன. வானொலி கேட்டுக்கொண்டு எமது பணியைச் செய்யலாம். ஆனால், தொலைக்காட்சிக்கு ஓரிடத்தில் அமர்ந் திருக்கவேண்டியது தான். பார்ப்பவருக்கும் நிகழ்ச்சிக்கும் இடை யில் தொடர்பாடல் Interaction குறைவு. மூளைக்கு வேலை எதுவும் தரப்படுவ தில்லை. இதனால் இந்த தொலைக் காட்சிப் பெட்டிக்கு - முட்டாள் பெட்டி - Idiot Box என்று மற்றொரு பெயரும் உண்டு. இப்படியிருந்தாலும் தொலைக் காட்சியை சரியானபடி உபயோகிப்பதால் பலன்களும் உண்டு என்பதை மறுப்பதற் கில்லை. உலகம் பற்றியும் உலகமக்களைப் பற்றியும் கற்றுத் தரும் ஆசான். குழந்தை களின் சொற்திறமையை - (Vocabulary) வளர்க்கும் ஒரு கருவி. புதிய திறன்களை யும், கலாசாரங்களையும் கற்றுத் தரும் கல்லூரி. சமூக உணர்வை வளர்க்கும் ஒரு சர்வகலாசாலை போன்ற நன்மையான பக்கங்களும் தொலைக்காட்சிக்கு உண்டு. எனவே, குழந்தைகளில் Activities என் கின்ற செயற்பாடுகளில் தொலைக்காட்சி பார்ப்பதையும் பாடசாலை வேலைகள் செய்வது போல், நண்பர்களுடன் விளை யாடுவது போல் நேர சூசிகை (Time Table) போடுங்கள். குழந்தைகள் பார்க்கவேண்டிய நிகழ்ச்சிகளை பட்டியலிட்டு அல்லது அவர்களை தேர்ந்தெடுக்கச் செய்து - பார்க்கும் காலத்தை வரையறைப்படுத் துங்கள். சும்மா எடுத்த நேரத்துக்கெல்லாம் அல்லது பொழுதை போக்க வேறுவழி யில்லாமல் - தொலைக்காட்சி பார்க்கும் பழக்கத்தை நீங்களும் நிறுத்துங்கள்.

குழந்தைகளுக்கும் அறிவுறுத்துங்கள். திட்டமிட்டு, குழந்தைகளின் படிப்புக்கு இடைஞ்சல் இல்லாதவாறு சேர்ந்திருந்து தொலைக்காட்சி நிகழ்வுகளைப் பாருங்கள். குழந்தைகள் பெற்றோரைத்தான் பின் பற்றுவார்கள். நீங்கள் நீண்டநேரம் பார்த் தால் அவர்களும் நீண்டநேரம் தொலைக் காட்சியில் செலவிடுவார்கள். பொழுது போக்கு நிகழ்ச்சிகள், அறிவூட்டல் நிகழ்ச்சிகளை சமமாக கலந்து பாருங்கள். வன்முறை கலந்த காட்சிகளை குழந்தை கள் பார்ப்பதால் குழந்தைகளுக்கு வன் முறையில் நாட்டம், அடக்கி ஆளும் மனவெழுச்சி Aggresiveness ஏற்படுவது உண்மை என்பது நிரூபிக்கப்படுள்ளதால் அத்தகைய நிகழ்ச்சிகளை தவிருங்கள். உணவு வேளைகளில், தூங்கும் நேரங்களில் தொலைக்காட்சியை அறவே தவிருங்கள். தொலைக்காட்சி பார்ப்பதைக் கண்டு நச்சரித்துக் கொண்டிராதீர்கள். அது எதிர்ப்புணர்வை வளர்க்கும். திருட்டுத்தன மாக பார்க்கத் தூண்டும். அன்புடன் அறிவுறுத்துங்கள்.

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிடி னும் - இந்த மு[illegible] சேர்ந்துதான் வா[illegible] அதன் நன்மைகளை மட்டும் பிரித்துப் பெறுவதே புத்திசாலித்தனமாகும்.

***

கேள்வி: எனது தந்தை வயது 60. இவரது இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து விட்டதால் - கழிவு அகற்றும் Dialysis சிகிச்சையை வாரத்துக்கு இரு தடவைகள் செய்யவேண்டியுள்ளது. அவரது இரத்த பரிசோதனையில், Creatine அளவு 10.5 gm/dl யூரியா அளவு 45 மி.கிம்/ dl, Haemoglobin 8 mg/dl உள்ளது. அவருக் குரிய உணவுமுறை பற்றி விளக்குக.

பதில்: ஒவ்வொரு சிறுநீரக செயலிழந்த நோயாளிக்கும் உணவுமுறை வித்தியாசப் படும். ஒரு Nutritionist என்கின்ற விசேட உணவியல் நிபுணரின் ஆலோசனையில் அவருக்குரிய உணவு முறை தயாரிக்கப் பட்டு பின்பற்றப்படவேண்டும். எனினும், இந்த சிறுநீரக கோளாறு நோயாளிகளின் உணவு முறைகளில் பொதுவாக பின்பற்றப்பட வேண்டிய விதிமுறை களை தருகின்றேன்.

சிறுநீரகச் செயலிழந்த நோயாளி கள் Dialysis இற்கு போகும் நோயாளிகள் அதி உயர்ந்த புரத உணவுகளை உட்கொள்ள வேண்டும். பொட்டாசியம் சத்து, உப்புச் சத்து என்பவை தவிர்க்கப்படவேண்டும். சிறுநீர் வெளியேறும் அளவுக்கு சமமாக நீர் மற்றும் நீராகாரம் (Fluids) குடிக்க வேண்டும். பொட்டாசியம் உள்ள உணவுகள், சொக்கலேட் வகைகள், உலர்ந்த பழவகைகள், பழரசங்கள், சூப் வகைகள், வாழைப்பழம் என்பவற்றை தவிர்க்கவும். காய்கறி வகைகளை நீரில் அவித்து, அவித்த நீரை கொட்டி விட்டு காய்கறிகளை உணவில் சேர்ப்பதால் காய்கறிகளில் உள்ள பொட்டாசியம் அகற்றப்பட்டுவிடும்.

***

கேள்வி: எனது தாயார் வயது 59. அவரது இரத்தச் சத்து - Haemoglobin - 6 gm/dl. அவர் இரத்தசோகையால் (Anaemia) பீடிக்கப்பட்டுள்ளார் என்று எமது வைத்தியர் இரத்தம் ஏற்ற சிபார்சு செய்கின்றார். இந்த வயதில் இரத்தம் ஏற்றுவதால் பிரச்சினை ஏதும் வராதா?

பதில்: Anaemia அல்லது இரத்த சோகை என்பது வயது, மற்றும் ஆண், பெண் என்ற பால் வேறுபாட்டைப் பொறுத்து இரத்தத்தில் உள்ள செங்குருதி துணிக்கைகள் மற்றும் இரத்தச்சத்து எனப் படும் Haemo- globin அளவுகள் குன்றந்தி ருக்கும் நிலையை குறிப்பது. பெண்களைப் பொறுத்தவரையில் - பொதுவாக 12 gm/dl இற்கு இரத்தச்சத்து குறைவாக இருப் பின், (கர்ப்பிணி பெண்களுக்கு 11.5 gm/ dl க்கு குறைவாக இருப்பின்) இரத்த சோகை ஏற்பட்டுள்ளது என்று நிதானிக்கப்படுகிறது. செங்குருதி துணிக்கைகளின் உற்பத்தி குறைவதால், இரத்தப்பெருக்கு ஏற்படுவதால் அல்லது அதிகளவில் செங் குருதி துணிக்கைகள் சிதைதல் அல்லது அழிவு ஏற்படுதல் - இரத்தசோகை ஏற்படு கிறது. எனவே, இரத்தசோகைக்கு உரிய சரியான காரணம் முதலில் கண்டறியப்பட வேண்டும். இரத்தசோகை ஆண்களை விட, பெண்களிடையே அதிகமாக காணப் படுகிறது. கர்ப்பம் தரித்தல் மற்றும் மாத விலக்கு காரணமாக இரத்தசோகை பெண் களுக்கு ஏற்படும் சாத்தியம் உள்ளது. ஆனால், எமது நாட்டில் சரியான உணவு முறையில்லாததால், இரத்தத்தின் உற்பத்திக்கு முக்கிய உற்பத்தி பொருட்க ளான இரும்புச்சத்து, Folic Acid, விட்டமின் B12 உணவில் தேவையான அளவுசேர்க்கப்படாததால் ஏற்படும் இரத்த சோகை கோளாறுதான் பொதுவாக காணப் படுகிறது. இரத்தப் பரிசோதனைகளான, Complete Blood Count, Reticulocyte Count Blood Picture என்பவற்றை ஆரம் பத்தில் செய்து, இரத்தசோகையின் அளவு, அதன் காரணம் என்பவற்றை அறிந்தே சிகிச்சை முறை தீர்மானிக்கப்படும். இரத்தம் ஏற்றல் என்பது இரத்தசோகையை உடனடி யாக குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும். தற்காலிக சிகிச்சையே தவிர - குணமாக் கும் சிகிச்சையல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எனவே, ஆரம்பத்தில் இரத்தம் செலுத்தமுன்னர் இரத்தசோகை யின் காரணம் கண்டறியபட்டு தற்காலிக மாக இரத்தம் ஏற்றி, பின்னர் இரத்த சோகைக்கான காரணங்களுக்கு சிகிச்சை யளிக்கப்படவேண்டும். எந்த வயதின ருக்கும் இரத்தம் ஏற்றுதலால் பிரச்சினை கள் நேராது.

***

கேள்வி: சோயா அவரை உணவுகள் எந்த விதத்தில் சிறந்தவை என்பது பற்றி விளக்குவீர்களா? எந்த வகை சோயா உணவுகளைச் சேர்க்க வேண்டும்?

பதில்: சோயா அவரை உணவுகள். எமது இரத்தத்தில் உள்ள தீங்கான கொலஸ்திரோல் எனப்படும் Ldl கொலஸ்திரோல் அளவை குறைக்கின்றன. வாயில் ஏற்படும் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய் என்பவற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றன. இதய இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை தவிர்க்கின்றன. சோயா அவரையில், Genistein என்ற இரசாயனப்பொருள் உள்ளது. இது புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது. சோயா அவரையிலுள்ள இன் னொரு கூட்டுவகை இரசாயனப்பொருளான Isoflavent, வாய்ப்புற்று, மார்பக புற்றுக் களினின்று பாதுகாப்பளிக்கின்றது. சோயா உணவுகள், தனியாக சோயா அவரை விதைகளாக, சோயா அவரை மா வகை, சோயா பாலாக, சோயா சோஸ் (Sauce) ஆக, டோபு (Tofu) எனப்படும் சோயா பன்னீர் (Soya Curd) ஆக கிடைக்கின்றன. சோயா மாவை எமது கறிகள், குழம்பு வகைகளுக்கு தேங்காய் பாலுக்கு பதிலாக உபயோகிக்கலாம். சோயா மாவில் - பாண், கேக் என்பவற்றை கோதுமை மாவுடன் கலந்து தயாரிக்கலாம். சோயா பாலை Cereals எனப்படும் காலை உணவுகளுடன் கலந்து அல்லது தனியாக பாலாக குடிப்ப தற்கும் உபயோகிக்கலாம். சோயா பன்னீர் - Stirfry எனப்படும் வதக்கல், மற்றும் சூப், சலாட் (Salads) என்பவற்றில் உபயோகிக் கலாம். மொத்தத்தில் சைவ உணவு பிரியர் களுக்கு நிறைவான புரதச்சத்து சோயாவில் உண்டு.

***

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் சிறுநீரகத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

18-05-2009 முதல்
24-05-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

**மேஷம்**

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

**இடபம்**

கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் -1, 2

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய ஆக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**மிதுனம்**

மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷடம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**கடகம்**

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**சிம்மம்**

மகம், பூரம், உத்தரம் 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

**கன்னி**

உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

**துலாம்**

சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் இருக்காது.தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

**விருச்சிகம்**

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷடம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேற்றாம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**தனுசு**

மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

**மகரம்**

உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**கும்பம்**

அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**மீனம்**

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.


## சேவை நலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்



### திரு.அருளப்புவில்லியம்ஜேசுதாசன்

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி யாழ்.அதிமேற்றரக்கிளை)

இலங்கை வங்கி யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்துக் கிளைகளிலும், வவுனியாக் கிளையிலும் இறுதியாக யாழ். அதி மேற்றரக் கிளையிலும் கடமை புரிந்து இன்று 18.05.2009இல் தமது 29 வருட சேவையின் பின்னர் ஓய்வு பெறும் திரு. அருளப்பு வில்லியம் ஜேசு தாசன் அவர்களின் 59வது பிறந்த நாளாகிய இன்று தமது எதிர்வரும் ஓய்வு நாள்களில் ஆரோக்கியத்துடனும் சகல சௌபாக்கியத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனின் அன்பும் கருணையும் நிறைந்து இருக்க ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

கடமையில் கண்ணியம்காத்து குடும்பத்தில் அன்பும் அமைதியும் பொழிந்து எவருடனும் இனிமையாகவும் பழகி எமக்குப் பெருமை தேடித் தந்திருக்கும் குடும்பத் தலைவனை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.அன்ரன்குமார்,
திருமதி.யசோதா மேரிமக்டலின்,
86000 Poitiers, France.
மனைவி ராஜேஸ்வரி,
மகள் அலன்ரீனா ஜேசுதாசன்,
மருமகள் அல்பிறட் [illegible]

இல. 28,
செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

(85369)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 01.04.1920
மறைவு 18.04.2009

### அமரர் நாகரத்தினம் வல்லிபுரம்

கடந்த 18.04.2009 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு எம்முடன் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (18.05.2009) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(சி/558551)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும், திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

# யாழ்.மாவட்டப் பாடசாலைககளின் மெய்வன்மைப் போட்டி; வெற்றியீட்டிய வீராங்கனைகள் விவரங்கள் வெளியாகின

வலி.வடக்கு . மே 18

யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றியீட்டிய வீராங்கனைகளின் விவரங்கள் வருமாறு:-

**11 வயதுப் பிரிவு**

*75 மீற்றர் ஓட்டம்*

அ. அபிநயா ( உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ர.நிலானா(கரவெட்டி தேவரையாளி இந்து கல்லூரி, பா.கிரிஜா(கல்வயல் ஸ்ரீசண்முகா வித்தியாலயம்)

*100மீற்றர் ஓட்டம்*

த. யோகீதா(சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், அ.அபிநயா(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ர.துர்க்கா(உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்).

**உயரம் பாய்தல்**

ம.மேரிசொலிசியா(அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), பா.பவதாரணி, ந.சுஜீவனா(தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

த.யோகிதா(சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்),ம.மரியயூட் (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை),மா.சுகிந்தா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**13 வயதுப்பிரிவு**

*100மீற்றர் ஓட்டம்*

ஜே.றெசிலக்சாளினி(இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), சி.மலர்வாணி (வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி), க.கிலக்சினி(வட்டு. மத்திய கல்லூரி).

*200மீற்றர் ஓட்டம்*

ஜே.றெசிலக்சாளினி (இளவாலை கன்னியர்மடம் பாடசாலை),ம.சிந்துஜா(தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ம.மதுலா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**நீளம் பாய்தல்**

கெ.அனித்தா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), வி.பவித்திரா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), இ.மைதிலி (கொடிகாமம் அரசினர் த.க.பாடசாலை).

**உயரம்பாய்தல்**

அ.டெசிந்தா(மீசாலைவீரசிங்கம் வித்தியாலயம்),சி.மலர்வாணி (வட. இந்து மகளிர் கல்லூரி), சு.சுவாஸ்கினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்**

இளவாலை கன்னியர்மடம் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**15 வயதுப்பிரிவு**

*100 மீற்றர் ஓட்டம்*

லே.யோகமயிலினி (வட.இந்து மகளிர் கல்லூரி),பி.தர்சிகா(இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), யோ.டிலக்சனா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

*200 மீற்றர் ஓட்டம்*

இ.தரசுதா(கொக்குவில் இந்துக் கல் லூரி), யோ.டிலக்சனா(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பி.தர்சிகா (இளவாலை கன்னியர் மடம் பாடசாலை).

*400 மீற்றர் ஓட்டம்*

பி.தர்சிகா(இளவாலை கன்னியர் மடம் பாடசாலை), ம.தர்மினி(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்),வி.சுவேதா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

*100 மீற்றர் தடை தாண்டல்*

த.நித்தியா(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி),க.கஸ்தூரி(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),யோ.டிலக்சனா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),

**நீளம் பாய்தல்**

ம.ஜோய்கருண்யா(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), லே.யோகமயிலினி (வ.ட.இந்து மகளிர் கல்லூரி),ஸ்ரீ.மகி ழினி (வட.மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை).

**உயரம் பாய்தல்**

இ.தரசுதா(கொக்குவில் இந்துக் கல்லூரி), வே.யோகமயிலினி(வட.இந்து மகளிர் கல்லூரி), இ.சந்திரிகா(வட மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**குண்டுஎறிதல்**

நி. சாமந்தி(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,கி. கீர்த்தனா(நீர்வேலி அத்தியார் இந்து கல்லூரி),ஹ.ஹனாளா ரஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**தட்டெறிதல்**

செ.சுகன்யா (பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்),த. விதுசனா (வட.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), செ.எழிலேந்திரணி (யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)

**ஈட்டி எறிதல்:-**

பா.வகீர்த்தா (வட.கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை), ச.ஞானகீர்த்தனா (வட.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆ.தேனுசா (ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்)

**4x100 மீற்றர் அஞ்சலோட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கொக்குவில்இந்துக்கல்லூரி, இளவாலை கன்னி யர் மடம் பாடசாலை.

**4x400 மீற்றர் அஞ்சலோட்டம்**

இளவாலை கன்னியர் மடம் பாடசாலை, கொக்குவில் இந்துக்கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. *(வளரும்)* (04-86)



கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில், பெண்களுக்கான கபடி, உதை பந்தாட்டப் போட்டிகளில் சம்பியனான வதிரி பொம்மேர்ஸ் அணி வீராங்கனைகள் பயிற்சியாளருடன் நிற்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# பிறேம்குமாரின் 'ஹட்ரிக்' கோல் சாதனையின் துணையால் மாவட்டச் சம்பியனானது கரவெட்டிப் பிரதேச செயலகம்

கரவெட்டி, மே18

செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான யாழ். மாவட்ட பிரதேச உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் சம்பியனானது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

பரபரப்பான இறுதியாட்டத்தில் 03.02 என்ற கோல் கணக்கில் மாவட்ட மட்டத்தில் கரவட்டி பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்தப்போட்டியின் சிறப்பம்சமாக பிரதேச செயலக அணி வீரர் எம். பிரேம்குமார் 03 கோல்களையும் அடித்து ஹட்ரிக் சாதனையை நிகழ்த்தி வெற்றிக்கு வழிகோலினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(04-70)

# யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான கரம் போட்டிகள் சென்.பற்றிக்ஸ், சென்.ஜோன்ஸ் அணிகள் சம்பியனாகின!

வலி.வடக்கு, மே 18

யாழ்மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே கரம் போட்டிகள் முதல் தடவையாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தின் உள்ளக அரங்கில் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் மோதிக் கொண்டன. முதல் இரண்டு தனிநபர் ஆட்டங்களும் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இரட்டையர் ஆட்டம் இடம்பெற்றது.

இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி 26 -04 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று 15 வயதுப் பிரிவில் மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்துக்கும் நெல்லியடி மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் உடுவில் முருகமூர்த்தியை வீழ்த்தி, நெல்லியடி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதன்போதும் இரண்டு தனிநபர் போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இரட்டையர் போட்டி ஆட்டம் இடம்பெற்றது.

இரட்டையர் போட்டியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி 19 வயதுப் பிரிவில் யாழ். மாவட்ட சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியும் கரவட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

(04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# வலிகாமம் வலய உடற்பயிற்சிப் போட்டி! ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் சம்பியன்!

வலி.வடக்கு,மே 18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் முதலாம் இடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை இளவாலை சென்.கென்றீஸ் கல்லூரியும் மூன்றாம் இடத்தை சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

(04-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த வேளை சுன்னாகத்தில் வீட்டினுள் புகுந்து திருட்டு

வலி.வடக்கு,மே 18

மின்சாரம் துண்டிக்கப்பட்ட வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டினுள் இருந்த பணம், சைக்கிள், நீர் இறைக்கும் மோட்டர் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

சுன்னாகம் பருத்தியடைப்புப் பகுதியில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டுக்காரரின் சைக்கிளில், மோட்டரைக் கட்டிக்கொண்டு சென்றதாகவும் விழிப்புக் குழுவினர் திருடனைக் கண்டு விரட்டிய போதிலும் திருடன் மிகவும் வேகமாகப் பொருள்களுடன் தப்பி ஓடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இத்திருட்டுச் சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருக்கும் வேளைகளில் திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து திருட்டு முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் கூடுதலாகக் காணப்படுவதாகவும்.

மின்சாரம் துண்டிக்கப்படும் வேளைகளில் பொதுமக்கள் தமது வீடுகளின் கதவுகளை பூட்டி விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் பொதுமக்களுக்குச் சுன்னாகம் பொலிஸார் அறிவித்துள்ளார்கள்.

(203 - 86)

# தமிழ்மொழித்தினம் தொடர்பான சுற்றறிக்கை யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்குக் கிடைக்கவில்லை

## போட்டிகளை நடத்துவதில் ஆசிரியர்கள் சிரமம்

அச்சுவேலி, மே 18

தமிழ்மொழித்தினம் தொடர்பான சுற்றறிக்கை யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இதுவரை உரிய முறையில் கிடைக்கவில்லை.

பாடசாலை மட்ட தமிழ்த் தினப் போட்டிகள் 15.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ள போதும் சுற்றறிக்கை உரியமுறையில் கிடைக்காமல் இருப்பதால் பொருத்தமான முறையில் தமிழ் மொழித்தினம் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை என கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்கள் சிலர் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட தமிழ்மொழித் தினம் தொடர்பான விவரங்களைப் பிரதி எடுத்து பயன்படுத்துகின்ற போதிலும் அதில் சுற்றறிக்கையை வெளியிட்டவர் யார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான கையொப்பம் இல்லாமல் இருப்பது பலரையும் குழப்பத்துக்கு ஆளாக்கியுள்ளது.

தமிழ் மொழித்தினம் பாடசாலை மட்டம், கல்விக் கோட்ட மட்டம், கல்வி வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என்ற நிலையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நடத்தப்பட்டு தேசிய மட்டத்திலான தமிழ் மொழித்தின நிகழ்வுகள் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நினைவாக ஜூலை 19ஆம் திகதி நடைபெற வேண்டும்.

இது நியப்படுத்தப்பட்ட நடைமுறையாக இருந்த போதிலும் உரிய அட்டவணையின் பிரகாரம் நடைபெறுவது இல்லை.

(203-11)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி அருளம்பலம் இராஜேஸ்வரி

28.04.2009ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (18.05.2009) திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோவளம்,
காரைநகர். (85371) குடும்பத்தினர்

# இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்தில் புதிய தேர்

யாழ்ப்பாணம், மே 18

கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்திற்குப் புதிதாகச் சித்திரத் தேரும் அதற்கான தேர் முட்டியும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா அடுத்த மாதம் 3ஆம் திகதி இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

(203- 224)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது யா/சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி கெலன் றோஸ் ஜெகநாதன் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர் மத்தேசுப்பிள்ளை இம்மனுவேல் போசுவ்

அவர்களின் மரணத்தையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குருநகர்,
யாழ்ப்பாணம். (85379) மகாவித்தியாலய சமூகம், சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

# தண்ணீர் இன்றி கால்நடைகள் அலைச்சல்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.முற்ற வெளிப் பகுதியில் மேய்ச்சலில் ஈடுபட்டு வரும் வளர்ப்புக் கால்நடைகள் குடி தண்ணீர் வசதி இன்றி அலைந்து திரிகின்றன.

தற்போதைய கடும் வெப்பம், வறட்சி காரணமாக முனீஸ்வரன் வீதியில் உள்ள புல்லுக் குளத்திலும் தண்ணீர் மட்டம் குறைந்துள்ளது.

இதனால் மேய்ச்சலில் ஈடுபடும் இந்தக் கால்நடைகள் குடிப்பதற்குத் தண்ணீர் இன்றி அலைந்து திரிகின்றன.

(203-224)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
16 ★ 08 ★ 1925



மறைவு
18 ★ 04 ★ 2009

நீர்வேலி ஸ்ரீமான் அத்தியார் அருணாசலம் அவர்களின் மருமகள்

திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்
(பாலா ரீச்சர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
பாசத்தோடு எமைக் காத்து
எமக்காகவே வாழ்ந்த எம்
அன்புத் தெய்வத்தின் நினைவுகள்
எம் உயிருள்ள ஒவ்வொரு கணமும்
உன் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்:
இராஜவீதி,
நீர்வேலி மேற்கு. குடும்பத்தினர். (85382)

## இதய அஞ்சலிகள்



அமரர் மத்தியாஸ் மரியாம்பிள்ளை
(சம்மாட்டியார்)

ஊரின் தலைமகனாய்
உழைப்பின் சிகரமதாய் - எம்
நெஞ்சமெல்லாம் நிறைந்த பெரியோனே!
உமது வாழ்க்கை
எமக்கெல்லாம் உதாரணம் ஐயா!
உமது இடத்தை நிரப்புவதற்கு
மீண்டும் நீரேதான் பிறந்து வரவேண்டும்
உமது ஆத்மா இறைவனில் சங்கமிக்க
எமதுள்ளத்தால் பிரார்த்திக்கின்றோம்.

ஊறணி புனித
(85378) அந்தோனியார் ஆலய பங்கு மக்கள்.

# விளையாட்டு அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மே 18

கொழும்பு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் விளையாட்டு அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று உரியமுறையில் பூரணப்படுத்தி பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், ரொறிங்ரன் பிளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

(7)

# வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.போதனா வைத்தியசாலையின் உள்ளக வீதியின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

வைத்தியசாலையின் இந்த உள்ளக வீதி கடந்த பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்து வந்தது.

தற்போது இந்த வீதி தார் ஊற்றி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

(203-224)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02 ★ 04 ★ 1966



உதிர்வு
24 ★ 05 ★ 2003

கலாவித்தகி திருமதி மேகலா வசந்தகுமார்
B.A. (HONS)., Dip. in Edu.
(ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

திதி: நவமி (18.05.2009)

ஆதரித்து அரவணைத்து எமைக்காத்து
பாதியில் எம்மை விட்டு நீர் பிரிந்து
ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
எம் அன்பு மனங்களில் நீர் எப்போதும்
ஆசையோடு வாழ்கின்றீர் அம்மா.

உங்கள் பிரிவால் துயருறும்:
இல.61/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். அன்புக் கணவர், ஆசைமக்கள் பாசமிகு குடும்பத்தினர். (85380)

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் ஞானசக்தி



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் சோயாலேன் வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்ட பத்மநாதன் ஞானசக்தி 16.05.2009 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - தங்கம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான S.K.K. கணபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற றஜீவன் மற்றும் லவன்(U.K.), தனஞ்சயன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை மற்றும் பராசக்தி, அருளானந்தன், நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் திஸநாயக்கா காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இராஜபுஸ்பம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாண்டிக்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கொக்குவில். (85281) சகோதரன்.


டிஜிற்றல் பிறிண்ட்

90 ரூபாயில் இருந்து



★ இல.212,கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
★ இல.40,பிரவினா வீதி, ரத்மலானை.
T.P -0718270396, 0777110610, 0212229607

விற்பனைக்குண்டு

மகோகனி, சப்புப்பலகை, தீராந்தி வகைகள்

பீடிங், மோல்டிங் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே: 0719134767, 0‑7073702


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்.இலக்கிய வட்டத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் உரையாற்றுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

யாழ்.இலக்கியப் பேரவையின் 2006 ஆம் ஆண்டுக்கான பரிசில்களையும் விருதுகளையும் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்கினார். அவரிடமிருந்து பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், வைத்திய கலாநிதி எஸ்.சிவசண்முகராஜா ஆகியோர் பரிசில்கள் பெற்றுக்கொள்வதை நான்காவது ஐந்தாவது படங்களில் காணலாம்.

'நாவேந்தன்' விருதை கலாநிதி க.குணராசாவும் கனகசெந்திநாத விருதை சிறுகதை எழுத்தாளர் தி.மயூரனும் பெற்றுக் கொள்வதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

மொழி பெயர்ப்புக் கவிதைக்கான விருதை யாழ்.பல்கைலக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் வை. சுந்தரேசன் பெற்றுக்கொள்வதையும் சிறுகதைத் தொகுப்பு நூல்களின் பிரதிகளை எழுத்தாளர் க.சட்டநாதன், அ.த.கிருஷ்ணராஜா ஆகியோர் பெற்றுக்கொள்வதையும் இறுதி மூன்று படங்களிலும் காணலாம்.

*(படங்கள்:லக்ஷ்மன்)*

# மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது அதனைச் சீர்செய்ய எழுத்தாளர்கள் பணியாற்ற வேண்டும்

## பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கருத்து

யாழ்ப்பாணம்,மே 18

அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை மீட்டெடுக்கும் பணியை பாடசாலை மட்டத்திலிருந்து வீட்டுச் சூழல்வரை எழுத்தாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக பதில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தெரிவித்தார்.

யாழ்.இலக்கிய வட்டத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழா ஆண்டும், பரிசளிப்பு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ்.இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான் க.குணராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பரிசளிப்பு உரையை பேராசிரியர் சிவலிங்கராசா நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

வாசிப்புப் பழக்கம் மாணவர்களிடையே மிகவும் அருகி வருகின்றது. அதற்குக் காரணம் கல்விச்சுமை, தொலைக்காட்சியின் தாக்கம் என்பவையாகும். இப்போது வீடுகளில் உள்ளோர் வாசிப்பதில்லை. மாறாக இப்போது ஒவ்வொரு வீடும் தியேட்டராக மாறிவிட்டது. அந்த அளவுக்கு தொலைக்காட்சியைப் பார்த்து அதில் மூழ்குவது அதிகரித்துள்ளது.

நாங்கள் சிறு வயதில் பாடசாலையில் படித்தபோது நிறைய வாசித்தோம். அன்றைய காலங்களில் சினிமாத்தியேட்டர் வாசலில் நிற்பதைக் கண்டாலே பெற்றோர் எம்மைக் கடுமையாகத் தண்டிப்பார்கள். ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது.

தற்போது நாங்கள் வாசிப்பது போதாமலிருக்கிறது. இளமையில் கல் என்பது போல வாசிப்புப் பழக்கமும் இளமையிலிருந்தே வரவேண்டும். வாசிப்புத்தான் படிப்பு. படிப்புத்தான் வாசிப்பு. இதனை மாணவர்கள் நன்குணர்ந்து நிறைய வாசிக்க வேண்டும். பெற்றோர்களாகிய நாமும் பிள்ளைகளை வாசிப்புப் பழக்கத்தில் வளர்த்தெடுக்க வேண்டும்.

அச்சு ஊடகங்கள் வந்தபோது இலகியப் பரப்பில் மாற்றம் ஏற்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் பின்னர் எழுத்து வரிவடிவமாகியது. இப்போதுள்ள தலைமுறையின் எழுத்து சிதறிப்போயுள்ளது. அவர்களது எழுத்துக்களை வாசிக்க முடியாது. அவர்களது கையெழுத்து மோசமாகவுள்ளது. அத்துடன் இளைய தலைமுறையினர் எழுதுவதும் குறைந்து விட்டது. எல்லாவற்றையும் கணனியில் பதிவு செய்கின்றார்கள். அதற்காக விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் குறைகூற விரும்பவில்லை.

வாசிப்புப் பழக்கத்தை அனைத்துத் தரப்பினரிடத்திலும் இலக்கிய பாரம்பரியத்தினர் ஏற்படுத்த வேண்டும். வாசிப்புப் பழக்கம் இருந்தால்த்தான் சிறுகதைகளையோ, நாவல்களையோ, கட்டுரைகளையோ வாசகர்கள் படிப்பார்கள். ஆகையால் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

மூத்த எழுத்தாளர் தெணியான் உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

குறைந்துள்ள வாசிப்புப் பழக்கத்தை மேலும் ஊக்குவிக்க வேண்டும். மனிதனின் தேக ஆரோக்கியத்துக்கு போஷாக்குணவு சாப்பிடுவதுபோல, வாசிப்புப் பழக்கமும், போஷாக்கு உணவை உட்கொண்டு பலம் பெறுவதுபோல முழுமை பெறும் அளவுக்கு வாசிப்புப் பழக்கம் இருக்க வேண்டும்.

நான் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில்தான் அங்கம் வகிக்கிறேன். யாழ்.இலக்கிய வட்டத்தில் அங்கம் வகிக்கவில்லை. கனக செந்திநாதன் போன்ற முதுபெரும் எழுத்தாளரால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்.இலக்கிய வட்டம் சில காலம் தளர்ந்து இருந்தாலும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்குப் பிரதான காரணம் அதன் இயங்கு சக்தி யாழ்ப்பாணத்திலேயே இருப்பதுதான். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இயங்கு சக்தி கொழும்பிலேயே இருந்து வருகிறது.

அத்துடன் வட்டம் என்ற முத்திரையை வைத்துக் கொண்டு செங்கை ஆழியான் சிறப்பான முறையில் இலக்கிய வட்டத்தையும் பணிகளையும் முன்னெடுத்துச் செல்கின்றார் -என்றார்.

யாழ்.இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான் குணராசா பேசுகையில்-

இரசிகமணி கனக.செந்திநாதனின் சிந்தனையில் 1965 ஆம் ஆண்டு உருவான யாழ். இலக்கிய வட்டம் பல்வேறு இலக்கியப் பணிகளைச் செய்துவந்துள்ளது. இந்தியாவிலிருந்து இலக்கியவாதிகளை அழைத்து உரைகளையும், கலந்துரையாடல்களையும் நடத்தியதுடன் எழுத்தாளர்கள் பலரின் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

ஆனால் இலங்கை முழுவதிலும் உள்ள நூற்றுக்கணக்கான இலக்கிய அன்பர்களை இலக்கிய வட்டம் சேர்த்துக்கொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது -என்றார்.

ஆசியுரையினை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரையை திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும், வரவேற்புரையை அரியாலையூர் சி.சிவதாசனும் நிகழ்த்தினார்கள். யாழ்.இலக்கிய வட்டத்தின் அறிக்கையை அதன் செயலாளர் நயினை கிருபாவும் இலக்கியப் பேரவையின் அறிக்கையை அதன் செயலாளர் சி.சிவதாசனும் வாசித்தார்கள்.

2006 ஆம், 2007 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கியப் பேரவைப் பரிசில்கள், கனக செந்தி கதா விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு, பரிசு, விருது வழங்கல்கள் 2007 ஆம்ஆண்டுக்கான நாவேந்தன் விருது வழங்கல் என்பனவும் இடம்பெற்றன.

'இன்னொரு புதிய கோணம்' ஆசிரியர் கலாபூசணம் தெணியான் 'வற்றாத நதி' ஆசிரியர் செங்கை ஆழியான் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (9-111-236)

# சாவகச்சேரி, கொடிகாமம் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்ட 818 குடும்பங்கள் இராமாவில் நிலையத்திற்கு இடம் மாற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மே 18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்த மக்களில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் சுமார் 818 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 435 பேர் கொடிகாமம் இராமாவில் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையத்தின் முதல் பகுதிக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

யாழ். செயலகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 427 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 257 பேரும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் 391 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 178 பேரும் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது இராமாவில் நலன்புரி நிலையத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியான தங்குமிட வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நலன்புரி நிலையத்தை அமைப்பதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கிய ஐ.நா நிறுவனங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மாவட்டச் செயலகம் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த இரு பாடசாலைச் சமூகமும், கல்வித் திணைக்களமும் மிகவும் நெருக்கடியான நேரத்தில் இடம்பெயர்ந்த மக்களை வைத்துப் பராமரிக்க ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிலையத்தில் இரண்டாவது கட்டப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டதும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் புதிய நிலையத்திற்கு இடம்மாற்றப்படுவர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மாணவர்கள் கல்வி கற்கவென தற்காலிக வகுப்பறைகள் அமைக்க அடையாளம் காணப்பட்ட காணிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இந்த வாரத்தில் வகுப்பறைகள் அமைப்பதற்குரிய பணிககளை 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் கல்வித் திணைக்களம் மேற்கொள்ளும் எனவும் - அந்தச் செய்திக் குறிப்பில் அரச அதிபர் கே.கணேஷ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(203-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனைப் பிடிக்கப் போகிறோம் எனக் கூறி

# தமிழினத்தை பூண்டோடு அழிக்கத் திட்டம்; அதை வேடிக்கை பார்க்கிறது இந்திய அரசு!

### கடுமையாகக் குற்றஞ்சாட்டுகிறார் விஜயகாந்த்



சென்னை, மே 18

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடிக்க போகிறோம் என்று சொல்லி, இலங்கை அரசு தமிழ் இனத்தைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த இரத்தக்கறை படிந்த வரலாற்றுப் பேரழிவைத் தடுத்திட இந்திய அரசோ, தமிழக அரசோ எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் வெற்றிக்களிப்பில் திளைத்துக் கொண்டிருப்பது வெட்கக் கேடானதாகும்.

- இவ்வாறு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

விடுதலைப் புலிகளை அழிப்போம் என்ற பெயரால் இலங்கை அரசு வரலாறு காணாத தமிழினப் படுகொலையை நடத்தத் திட்டமிட்டுள்ளது. போர்முனையில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் மீட்கப்பட வேண்டும் என்றும், மனிதாபிமான அடிப்படையில் இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்றும், இல்லையென்றால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இலங்கை அரசின் போக்கை பிரிட்டன் எதிர்த்ததோடு மட்டுமில்லாமல், அவர்களை போர் குற்றவாளிகள் என்று வழக்கு தொடருவோம் என்றும் கூறியுள்ளது.

தீவிரவாதிகளை ஒழிப்போம் என்ற பெயரில் ஒரு அரசு சட்ட ஆட்சியை மீறியோ, மனிதாபிமானம் இல்லாமலோ செயற்படுவது அரச பயங்கரவாதம் என்று ஐரோப்பிய யூனியனும் இலங்கை அரசின் போக்கைக் கண்டித்துள்ளது.

இலங்கை அரசு சர்வதேச பத்திரிகையாளர்களுக்கோ, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கோ அப்பகுதிக்குச் செல்ல அறவே அனுமதிக்கவில்லை. ஆகவே, அப்பாவிப் பொதுமக்கள் பட்டினியாலும், படுகாயங்களாலும் பெருமளவில் சாகும் தறுவாயில் உள்ளனர். செஞ்சிலுவைச் சங்க அதிகாரியே கற்பனை கெட்டாத மிகப்பெரிய மனிதகுலப்பேரழிவு ஏற்படும் என்று அபாயச் சங்கை ஊதியுள்ளார்.

மேலும், இலங்கை அரசு தான் சொல்வதற்கு மாறாக, அங்குள்ள மக்கள் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துகிறது என்ற தகவல்கள் உலக நாடுகளையே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது -என்றுள்ளது.

# அரசியல் லாபத்திற்காக ஈழப் பிரச்சினை; அ.தி.மு.கவைப் புறக்கணித்தனர் மக்கள்

### திருமா பேட்டி

சென்னை, மே 18

அரசியல் ஆதாயத்திற்கு ஈழத்தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்த முயன்ற அ.தி.மு.க. அணியை மக்கள் முற்றிலுமாக புறக்கணித்து விட்டார்கள் - என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறினார்.

தி.மு.க. கூட்டணி வெற்றியைத் தொடர்ந்து அவர் நேற்றுமுன்தினம் தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் வந்தார். அப்போது செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது அவர் கூறியவை வருமாறு -

தமிழக வரலாற்றில் முதன்முறையாக தலித்துகளும், சிறுபான்மை வகுப்பினரும் மிகப் பெரும்பான்மையான அளவுக்கு தி.மு.க. கூட்டணியை ஆதரித்துள்ளனர்.

ஈழத்தமிழர் பிரச்சினையை பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட அ.தி.மு.க. அணி பகீரத முயற்சி மேற்கொண்டது. ஆனால், அந்த அணி முற்றிலும் முரண்பாடுகளின் அடையாளமாக இருந்த காரணத்தால் மக்கள் அந்த அணியை புறக்கணித்துவிட்டார்கள்.

ஈழத்தமிழர் பாதுகாப்பிற்காக தி.மு.க. மற்றும் விடுதலை சிறுத்தைகள் செய்த முயற்சிக்களை மக்கள் நன்றி உணர்வோடு அங்கீகரித்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். எனவே, இந்த தேர்தலில் அ.தி.மு.க. அணி பரப்பிய அவதூறு எடுபடவில்லை. காங்கிரஸ் கட்சிக்குள் ஒற்றுமையாக பணியாற்றிய இடங்களில் தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவோடு காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். ஒற்றுமை பாதிக்கப்பட்ட இடங்களில் தோல்வியைத் தழுவியுள்ளனர் என்று கருதுகிறேன் - என்றார்.

இந்தத் தேர்தலில் பா.ம.க. போட்டியிட்ட 7 தொகுதிகளிலும் தோல்வி அடைந்துள்ளதே என்று திருமாவளவனிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, அதுபற்றி கருத்துக் கூற விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வெற்றி குறித்து அவர் கருத்து கூறுகையில், எங்களது உணர்வுகளை மக்கள் மதிக்கிறார்கள். எங்களை அவர்கள் நம்புகிறார்கள் - என்றார்.

# புதிய அமைச்சரவை பற்றி ஆலோசிக்க இன்று டில்லி விரைகின்றார் கருணாநிதி

சென்னை, மே 18

முதல்வர் கருணாநிதி இன்று திங்கட்கிழமை புதுடில்லி செல்கிறார். அங்கு சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோரை சந்தித்து புதிய அமைச்சரவை குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

தமிழகத்தில் தி.மு.க. 18 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில், இன்று தி.மு.க. தலைமை செயற்குழு கூட்டம் முதல்வர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டம் முடிந்த பின்னர் இன்று மாலையோ அல்லது நாளை காலையோ முதல்வர் கருணாநிதி டில்லி செல்கிறார்.

டில்லியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோரைச் சந்தித்து தேர்தலில் பெற்ற வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். தொடர்ந்து ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைமையில் அமைய இருக்கும் மத்திய அமைச்சரவை குறித்து சோனியாகாந்தி, மன்மோகன்சிங் ஆகியோரிடம் ஆலோசனை நடத்துகிறார்.

அநேகமாக, அமைய இருக்கும் மத்திய அமைச்சரவையில் தமிழ்நாட்டில் இருந்து இடம்பெற போகும் புதிய அமைச்சர்கள் யார்? யார்? என்பது முதல்வர் கருணாநிதி நடத்தும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது. மேலும் 2 நாள்கள் முதல்வர் கருணாநிதி டில்லியில் தங்கியிருந்து புதிய அரசு அமைக்கும் பணிகளில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எதிர்வரும் களங்களை வென்றெடுப்போம்; ஈழத் தமிழர் துயர்துடைக்கப் பயணிப்போம்

### வைகோ தெரிவிப்பு



சென்னை, மே 18

தேர்தலில் இப்போது தோற்றாலும், எதிர்காலத்தில் வரும் களங்களை வெல்வோம். தமிழகத்தின் நலன் காக்க, இலங்கைத் தமிழர் துயர் துடைக்க, நெஞ்சுரத்தோடு பயணத்தைத் தொடர்வோம் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கூறியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழகம், புதுவையில் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியினர் சுனாமி வெள்ளமாக ஊழல் பணத்தைத் தொகுதிக்குள் செலுத்தினர்.

வாக்குகளை விலைக்கு வாங்கிய பணநாயகத்தால் பல தொகுதிகளில் ஜனநாயகம் சாகடிக்கப்பட்டது.

அதையும் மீறி அ.தி.மு.க. கூட்டணி 13 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இது ஜனநாயகத்துக்கு சூட்டப்பட்ட மகுடம். பணத்தையும் மீறி எனக்கு வாக்களித்தவர்களுக்கு என் நன்றி.

இந்தக் களத்தை இழந்தாலும், இனி எதிர்வரும் களங்களை வெல்வோம். தமிழகத்தின் நலன் காக்க, இலங்கைத் தமிழர் துயர் துடைக்க, நெஞ்சுரத்தோடு பயணத்தைத் தொடர்வோம் - என்றுள்ளது.

# ஜனநாயக விரோதச் செயல்களில் தி.மு.க. அரசு: நடவடிக்கை எடுக்காதுள்ளது தேர்தல் ஆணையம்

### ஜெயலலிதா கடும் கண்டனம்

சென்னை, மே 18

ஜனநாயக விரோதச் செயல்களை இந்தியத் தேர்தல் ஆணையம் வேடிக்கை பார்க்கிறது - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழ்நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தி.மு.க.வின் பண பலம், படை பலம், அதிகார பலம் ஆகியவை ஜனநாயகத்தை வென்றுவிட்டன. ஜனநாயகம் அடியோடு குழிதோண்டி புதைக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தேர்தலில் தி.மு.கவினர் பரவலாக பணப்பட்டுவாடா செய்தது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடுகள் நடைபெற்றன, பல வாக்குச்சாவடிகளை தி.மு.கவினர் கைப்பற்றியது உட்பட பல்வேறு முறைகேடுகளை, அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகள், இந்திய தேர்தல் ஆணையத்திற்கு சுட்டிக்காட்டின. ஆனால், நடவடிக்கை எடுக்க வேண்டிய இந்தியத் தேர்தல் ஆணையம் வேடிக்கை பார்த்தது. ஜனநாயகத்தை பணநாயகம் வென்றுவிட்டதையே இந்தத் தேர்தல் உணர்த்துகிறது. வாக்கு எண்ணிக்கையிலும் தி.மு.க.வினரின் அராஜகம் தலைவிரித்து ஆடுகிறது.

உதாரணமாக, சிவகங்கை நாடாளுமன்ற தொகுதியில், கழக வேட்பாளர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வெற்றி பெற்றார் எனச் செய்திகள் வெளிவந்த பின்னர், காங்கிரஸ் வேட்பாளர் ப.சிதம்பரத்தின் தூண்டுதலின் பேரில், சில தில்லுமுல்லு வேலைகள் மூலம் தற்போது சிதம்பரம் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டுவிட்டது.

இதேபோன்று, விழுப்புரம் மற்றும் திருச்சி நாடாளுமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர்களுக்கான சான்றிதழ்கள் பல மணி நேர இழுத்தடிப்புப் போராட்டங்களுக்கு பின்னர் வழங்கப்பட்டு உள்ளன. இது போன்ற செயல்களை, ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்களை எல்லாம் இந்தியத் தேர்தல் ஆணையம் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறது.



ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபடும் தி.மு.க. அரசுக்கும், இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கும் எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# செருப்பு வீச்சு வாங்கிய அனைவரும் வெற்றி!

புதுடில்லி, மே 18

சப்பாத்து மற்றும் செருப்பு வீச்சு வாங்கிய அனைவரும் மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு, பொதுக் கூட்டம் போன்றவற்றில் பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் சிதம்பரம், பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் அத்வானி, தொழிலதிபர் நவீன் ஜிண்டால் உள்ளிட்டோர் மீது காலணிகள் வீசப்பட்டன.

இச்சம்பவங்கள் அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. செருப்பு வீசும் அளவுக்கு அவர்கள் வெறுப்பைச் சம்பாதித்துள்ளார்களா என்ற கேள்வியும் எழுந்தது.

ஆனால் காலணியால் குறி பார்க்கப்பட்ட சிதம்பரம், அத்வானி, நவீன் ஜிண்டால் ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். மன்மோகன் சிங் தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும் அவர் பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

கர்நாடக முதல்வர் எடியூரப்பாவும் செருப்பு வீச்சுக்கு ஆளானார். ஆனால் கர்நாடகத்தில் அவரது மகன் ராகவேந்திராவும், அவர் சார்ந்த பா.ஜ.கவும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது.

# இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

### மத்திய அரசிடம் கருணாநிதி வலியுறுத்து



சென்னை, மே 18

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோருக்கு அவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை எழுதிய கடிதத்தின் விவரம் வருமாறு -

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி 27-4-2009 அன்று நான் உண்ணாவிரதம் இருந்தேன். அதைத் தொடர்ந்து மத்திய அரசு எடுத்த முயற்சியால் இலங்கை அரசின் பாதுகாப்புக் கவுன்சில் கூடி போரை நிறுத்துவதாக அறிவித்தது.

ஆனாலும் இலங்கையில் முழுமையான போர் நிறுத்தம் ஏற்படவில்லை. இராணுவ நடவடிக்கை தொடர்ந்து வருகிறது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாக ஒரு பக்கமும், இரு தரப்பும் மோதலில் ஈடுபட்டுள்ளதாக ஒரு பக்கமும் செய்திகள் வந்துள்ளன.

அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண முயற்சி செய்து வருகின்றன.

இந்நிலையில் இந்திய அரசும் ஏற்கனவே கூறிவருவது போல போர்நிறுத்தம் ஏற்பட்டு அரசியல் தீர்வு காணப்பட உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இலங்கையில் ஏற்பட்டுள்ள பேரழிவை நிறுத்தி, அமைதியை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய விறுவிறுப்பான ஆட்டத்தில் ஓர் ஓட்டத்தினால் பஞ்சாப்பிடம் வீழ்ந்தது டெக்கான்

ஜெகன்னர்ஸ்பேர்க், மே 18

ஐ.பி.எல். ருவன்ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடரின் நேற்று நடைபெற்ற போட்டிகளில் ஒன்றில் விறுவிறுப்பான கட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஓர் ஓட்டத்தினால் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். போட்டிகளில் 49 ஆவது ஆட்டம் ஜெகன்னர்ஸ் பேர்க்கில் நேற்று நடைபெற்றது. இவ் வாட்டத்தில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், யுவராஜ்சிங் தலைமையிலான கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்துக் களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியின் ஆரம்ப வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். சொஹல் 9, கற்ரிச் 11, போமேஸ்வச் 1 என ஆட்டமிழந்தனர். அணியின் பரிதாபகரமான நிலையில் களமிறங்கிய அணித் தலைவர் யுவராஜ்சிங்



2 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 20 ஓட்டங்களைப் பெற்றார். அணியின் வெற்றிகள் பலவற்றில் பங்காற்றிய சங்கக்காரா இம்முறையும் தனது பங்களிப்பை வழங்கினார். 43 பந்துகளை எதிர்கொண்டு 4பௌண்டறிகள் ஒரு சிக்ஸரு டன் 56 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்துக் களமிறங்கிய மோற்றா 12 ஓட்டங்களுடனும் இர்பான் பதான் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, களமிறங்கிய பிறட்லீ ஓட்டமெதனையும் பெறாமலும் சாவ்லா ஓர் ஓட்டத்துடனும் களத்திலி ருந்தனர்.

பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

டெக்கான் அணி சார்பில் பந்து வீசிய ஆர்.பி.சிங் 3 விக்கெட்டுக்களையும் சைமன்ஸ், வேணுகோபால் ராய், சுமன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி

**ஐ.பி.எல். ருவென்ரி-20 இன்றைய ஆட்டங்கள்**

அணிகள் : சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் றைடர்ஸ்
மைதானம் : பிரிடோரியா
நேரம் : இரவு 8 மணி

என்ற இலக்குடன் களமிறங்கிய டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக் காரர்களான கில்கிறிஸ்ட் 4 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 23 ஓட்டங்களைப் பெற்ற போது விக்கெட் காப்பாளர் சங்கக்காரவினால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப் பட்டார். கிப்ஸ் 26 ஓட்டங்களைப் பெற்றார். சுமன் ஓட்டங்கள் எதனையும் பெறாது ஆட்டமிழந்தார்.

எனினும் சிறப்பாக களமாடிய சைமன்ஸ் 25 ஓட்டங்களையும் றோவித் சர்மா 42 ஓட்டங்களையும் பெற்றனர். ஒரு கட்டத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி வெற்றி பெற்று விடும் என்ற நிலையை அடைந்த போதும் டெக்கான் அணி விக்கெட்டுக்களை இழக்க ஆரம்பித்தது. இதனால் டெக்கான் அணியின் ஓட்ட சேகரிப்பு வேகம் குறையத் தொடங்கியது.

டெக்கான் வெற்றி இலக்கை அடைய நெருங்கிய கட்டத்தில் தனது மூன்றாவது ஓவரை வீசவந்த பதான் ஓட்டங்கள் கொடுப்பதை தவிர்த்தார். ஆனாலும் 19.3 ஓவர் நிறைவில் 131 ஓட்டங்களைப் பெற்ற டெக்கான் 3 பந்துகளில் வெற்றிக்காக 4 ஓட்டங்களைப்பெற வேண்டிய நிலையில் களத்தில் சிறப்பாக ஆடிய றோகித் சர்மா 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ஆர்.பி.சிங் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் 19.5 ஓவரில் ஆட்டமிழக்க இறுதிப்பந்தில் டெக்கான் அணி 2 ஓட்டங்களை மாத்திரமே பெற்று ஒரு ஓட்டத்தினால் தோல்வி அடைந்தது.

பஞ்சாப் அணி சார்பில் பந்து வீசிய யுவராஜ்சிங் 3 விக்கெட்டுக்களையும் பதான், பவார் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யுவராஜ்சிங் தெரிவானார். (06)

## ஐ.பி.எல். போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரர்கள்

| வீரர்களும் அணிகளும் | போட்டிகள் | இனிங்ஸ் | மொத்த ஓட்டம் | அதி.ஓட் | பௌண்டறி | சிக்சர் |
|---|---|---|---|---|---|---|
| மத்தியூ ஹைடன் (சென்னை சுப்பர் கிங்ஸ்) | 11 | 11 | 546 | 89 | 58 | 21 |
| ஏ.பி.டி.வில்லியர்ஸ் (டெல்லி டேர் டெவில்ஸ்) | 12 | 10 | 405 | 105★ | 35 | 10 |
| அடம் கில்கிறிஸ்ட் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 13 | 13 | 395 | 71 | 42 | 24 |
| டுமினி (மும்பை இந்தியன்ஸ்) | 12 | 11 | 363 | 62 | 24 | 11 |
| சுரேஸ் ரெய்னா (சென்னை சுப்பர் கிங்ஸ்) | 11 | 11 | 342 | 98 | 31 | 17 |

★ ஆட்டம் இழக்காமல் (அதி.ஓட் – அதிகூடிய ஓட்டம்)

## ஐ.பி.எல். போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்கள் பெற்ற வீரர்கள்

| வீரர்களும் அணிகளும் | போட்டிகள் | வீசிய ஓவர்கள் | கொடுத்த ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் | சிறந்த பந்துவீச்சு |
|---|---|---|---|---|---|
| ஆர்.பி.சிங் (டெக்கான் சார்ஜர்ஸ்) | 13 | 47.4 | 321 | 19 | 4/22 |
| லசித் மலிங்க (மும்பை இந்தியன்ஸ்) | 12 | 45.3 | 274 | 17 | 3/11 |
| நெஹ்ரா (டெல்லி டேர் டெவில்ஸ்) | 11 | 42.0 | 283 | 17 | 3/27 |
| இர்பான் பதான் (கிங்ஸ் லெவன் பஞ்சாப்) | 13 | 46.2 | 358 | 15 | 3/35 |
| முனாப் பட்டேல் (ராஜஸ்தான் றோயல்ஸ்) | 10 | 30.5 | 227 | 14 | 2/14 |



ஐ.பி.எல் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த (546) ஹைடன், அதிக விக்கெட் டுக்களை (19) கைப்பற்றிய ஆர்.பி.சிங்

# சானியா–ஷியா ஜோடி வெளியேறியது

மட்ரிட் ஓபன் ரென்னிஸ் தொடரின் ஓர் அரையிறுதி ஆட்டத்தில் சானியா - ஷியா சுங் ஜோடி தோல்வி கண்டதன் மூலம் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்தது.

ஸ்பெயின் நாட்டில் உள்ள மட்ரிட் நகரில் சர்வதேச ஓபன் ரென்னிஸ் போட்டி நடந்து வருகிறது.

இதன் பெண்கள் இரட்டையர் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தின்போதே சானியா மிர்சா (இந்தியா)-ஷியா சுங் (சீன தைபே) ஜோடி, கெவா பெஸ்க்-லிசா ரேமண்ட் (அமெரிக்கா) ஜோடியைச் சந்தித்தது.

இதில் சானியா ஜோடி 86 நிமிட போராட்டத்துக்கு பின்னர் 6-7, 4-6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வி கண்டு



இறுதிச்சுற்றுக்கான வாய்ப்பை இழந்து வெளியேறியது.

# உணவையும் மருத்துவக் குழுவையும் முள்ளிவாய்க்காலுக்கு உடன் அனுப்புக!

## அரசிடம் ஆனந்தசங்கரி வற்புறுத்து

கொழும்பு, மே 18

முள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள மக்களுக்கு உடனடியாக விமானம் மூலம் உணவுப் பொருள்களையும் வைத்தியக் குழுக்களையும் அனுப்புமாறு அரசை வற்புறுத்தக் கோருகின்றேன்.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி அரசை வலியுறுத் தியுள்ளார்.

இதுகுறித்து நேற்று விடுத்த அறிக் கையிலேயே அவர் இதனைக் கோரியுள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பயங்கரவாதம் என்ற சாபக்கேடு இலங்கையை இறுகப்பிடித்திருந்தது இன்று விடுவிக்கப்பட்ட பின்பு அனைவரும் மகிழ்ச்சி அடைய வேண்டிய விடயம்தான். ஆனால் யுத்தத்தால் ஏற்பட்டுள்ள வடுக்கள் மாற பல மாதங்கள் அல்லது வருடங்கள் கூட ஆகலாம்.

இன்று நாட்டுமக்கள் இவ்வெற்றியை கொண்டாட அழைக்கப்பட்டுள்ள வேளை, முள்ளிவாய்க்காலில் விட்டுவிட்டு வந்த தமது உறவினர்களை அரசு பாது காப்பாக வவுனியாவிற்குக் கொண்டு வரும் என எதிர்பார்த்திருந்த உறவினர்கள், அவர்களுக்கு என்ன நடந்ததென தெரியாது கண்ணீர் விடுகின்றனர். நேரம் போகப் போக அவர்களின் பதகளிப்பு முகாம்க ளில் கூடுகிறது. தமது உறவினர்களுக்கு என்ன நடந்த தென அறிய ஆவலாகவுள்ளனர்.

**துக்ககரமான செய்திகளே வருகின்றன**

முள்ளிவாய்க்காலில் இருந்து தினம் வரும் செய்திகள் துக்ககரமானதே. ஒரு கட்டத்தில் சிவில் நிர்வாகம் முற்றாக முறிந்துவிட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பீரங்கித் தாக்குதலுக்கு பயந்து வைத்திய அதிகாரிகளும் தமது சேவையை நிறுத்திக்கொண்டனர். அதே காரணத்திற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் தமது சேவையை நிறுத்திக்கொண்டது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கப்பலில் நிறைய உணவுப்பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையிலும், வழித்துணை தர செஞ்சிலுவைச் சர்வதேச குழுவும் மறுப்பதனால் கப்பலை அங்கு அனுப்ப முடியவில்லை எனக் கூறுகிறார். விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப் பட்டதற்கான அறிகுறிகளும் இல்லை. பல காய முற்றோர் வைத்திய உதவி நாடி வைத்தியசாலையில் காவல் இருக்கின்றனர் எனத் தெரிகின்றது. ஆனால் முதல் உத வியை வழங்கக் கூட அங்கே யாரும் இல்லை.

இது அங்கே இன்னமும் மக்களும், காய முற்றபலரும் இருக்கின்றார்கள் என்பதை புலப்படுத்துகின்றது. அங்கே உணவோ வைத்திய வசதியோ இல்லை. உடனடியாக விமான மூலம் உணவையும், ஒரு மருத்துவக் குழுவையும் அனுப்புமாறு அரசை மிகவும் வற்புறுத்தி கோருகிறேன். அங்கே அகப்பட்டு கொண்டவர்கள், காய முற்றோர் இறந்து கொண்டிருப்போர் ஆகியவர்களுக்கு உதவ எனது மனிதாபமான வேண் டுகோளைப் புறந்தள்ளாது உடன் செயற்படுத்துமாறு வேண்டுகின்றேன்- என்றுள்ளது. (அ-சி)

# போர் முனையில் சிக்கியுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர் அன்பழகன் கூறியவை வருமாறு -

தமிழக முதல்வர் கருணாநிதி, மனசாட்சியின் பேச்சைக் கேட்பவர். அதனால்தான் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல், திடீரென்று அதிகாலையில் எழுந்து, அண்ணா சமாதிக்குச் சென்று உண்ணாவிரதம் இருந்தார். இப்போதும் அதே மனச்சாட்சி யின் படிதான் இந்த அதிர்ச்சிகரமான முடிவை எடுத்துள்ளார்.

ஈழத் தமிழருக்கும், தமிழ் மொழிக்கும் கலைஞர் ஒரு துரோகி என்று தன்னை அபாண்ட மாகச் சித்திரித்த எதிர்க்கட்சிகள், தேர்தலில் மண்ணைக் கவ்வி விட்டாலும் கலைஞர் நெஞ்சில் ஏற்பட்ட அந்த வடு மட்டும் இன்னும் நீங்க வில்லை. தீயினால் சுட்ட புண் உள்ளாறும்! ஆறாதே நாவினால் சுட்ட வடு என்ற குறளோ வியத்தின் படி நடந்து கொண்டுள்ளார் கலைஞர்.

ஐம்பதாயிரம் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொண்ட பின்னரே அமைச்சரவையில் சேருவது பற்றி தி.மு.க. செயற்குழு கூடி முடிவெடுக்கும் - என்று அன்பழகன் செய்தியாளர்களிடம் கூறினார்.

பிரபாகரன் குறித்து ஏதேனும் கோரிக்கை வைப்பீர்களா - என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு -

கோரிக்கையைப் பிரபாகரனிடமும் வைக்க வேண்டும் அல்லவா? இதுவரை அவரி டம் தமிழகத் தலைவர்கள் யாரும் கோரிக்கை வைத்த தாகத் தெரியவில்லையே.

அப்பாவி மக்கள் வெளியேறினால் அவர்களைத் தடுக்க வேண்டாம் என்ற கோரிக்கையைத் தம்பி பிரபாகரனிடம் வைப்போமே தவிர, அவரைப் பற்றிய கோரிக்கையை அரசிடம் வைக்க மாட்டோம். இது அப்பாவிப் பொது மக்களுக்கான கோரிக்கை மட்டும்தான். அவர்கள் பாதுகாப்புக்கு மத்திய அரசு உத்தரவாதம் கொடுத்தால் மட்டும் போதுமானது - என்று அன்பழகன் மேலும் விளக்கமளித்தார்.

**சோனியா, மன்மோகன், ராகுல் முதல்வருடன் தொலைபேசியில் தொடர்பு**

டில்லியில் இருந்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் மன்மோகன் சிங், தமிழக முதல்வருடன் அவசரம் அவசரமாகத் தொலை பேசியில் பேசியுள்ளனர். ராகுல் காந்தியும் தொலைபேசியில் கலைஞரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளார். ஆனாலும் கலைஞர் தன் முடிவில் மிகவும் உறுதியாக இருக்கிறார் எனத் தெரிகிறது.

கலைஞரின் இந்த முடிவுக்கு தமிழகம் முழுவதும் பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் 45 பதுங்கு குழிகள் படையினரால் தாக்கி அழிப்பு!

## பிரபாகரனைப் பிடித்தால் என்ன செய்வதென்று ஜனாதிபதி முடிவெடுப்பார்

கொழும்பு, மே 18

பாதுகாப்பு வலயம் நோக்கிய தற்போதைய பாரிய நகர்வின் போது புலிகளின் 45 பதுங்கு குழிகளைப் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பிரபாகரன் உள்ளிட்ட புலித் தலைவர்கள் தற்போது எண்ணூறு மீற்றருக்குள் முடக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பிடிக்கும் நோக்கில் எமது படையினர் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

நாம் இப்போது புலிகளின் 45 பதுங்கு குழிகளைக் கைப்பற்றியுள்ளோம். புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் பிடிபட்டால் அவருக்கு என்ன செய்வதென்று ஜனாதிபதி முடிவெடுப்பார்.

எமது படைநடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றில் ஒன்றுகூட வெற்றியளிக்கவில்லை. அத்தனை தாக்குதல்களையும் நாம் முறியடித்து வருகிறோம்.

தற்போதைய படை நடவடிக்கையின் போது புலிகளுக்கு அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளன. புலிகளின் பல உடல்களை நாம் கண்டெடுத்துள்ளோம்.

நாம் மிக விரைவில் எஞ்சியுள்ள ஒன்றரை சதுரமீற்றர் நிலப்பரப்பைப் பிடித்துப் புலிகளை முற்றாக ஒழித்துவிடுவோம். புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களை நாம் வெற்றிகரமாக முறியடிப்போம் - என்றார்.



ஜோர்தானில் நடைபெற்ற ஜீ - 11 நாடுகளின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை வலியுறுத்தும் வகையில் விமானத்தை விட்டு தரை இறங்கியவுடன் அவர் தாய் மண்ணைத் தொட்டு வணங்கினார்.

அவர் விமான நிலையத்தைவிட்டு வெளி வந்தபோது, அரச ஆதரவாளர்கள் அவரை வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

### இன்று கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு செயலகத்தில் பதிவினை மேற்கொண்டவர்களையும் இன்று திங்கட்கிழமை காலை ஏழு மணிக்கு யாழ். ரயில் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (அ)

### வடக்கின் யுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையொட்டி நாடாளுமன்றிலும் நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அன்றையதினம் நாடாளுமன்றத்திற்குத் தவறாது சமுகம் கொடுக்கவேண்டும் என்று அரசால் கேட்டுக் கொள்ளப்படுவர் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

நாளை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டாரவின் தலைமையில் நாடாளுமன்றம் கூடும்போது ஜனாதிபதி இந்த விசேட உரையை நிகழ்த்துவார் என்றும் உரை முடிவுற்றதும் நாடாளுமன்றத் தின்பணிகள் மாலைவரை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

### மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட அவசர அறிக்கை ஒன்றில் அவர் இதனை அறிவித்துள்ளார்.

தமது நேற்றைய அறிக்கையில் செ. பத்மநாதன் தெரிவித்திருப்பதாவது:-

வன்னியில் கடந்த 24 மணி நேரத்தில் 3 ஆயிரம் மக்கள் வீதிகளில் கொல்லப்பட்டிருக்கும் அதேவேளையில் கடுமையாகக் காயமடைந்த 25 ஆயிரம் பேர் மருத்துவ பராமரிப்புக்கள் எதுவும் இல்லாமல் அங்குள்ளார்கள். எமது மக்களைப் பாதுகாப்பதே இப்போதுள்ள அவசரமான பணியாகும்.

இதனைக் கவனத்திற்கொண்டு எமது மக்களைப் பாதுகாப்பதற்காக எமது துப் பாக்கிகளை மௌனமாக வைத்திருப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்ற எமது நிலைப்பாட்டை உலகத்துக்கு நாம் ஏற்கனவே அறிவித்திருக்கின்றோம்.

சிறிலங்காவின் ஆயுதப் படையினரால் எமது மக்கள் ஈவிரக்கம் இன்றிப் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு உலகத்தில் உள்ள நாடுகளை நாம் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், எமது இந்தக் கோரிக்கை யாருடைய காதிலும் விழவில்லை.

போர் இடம்பெறும் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழர்களைப் பாதுகாப்பதற்கும் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு அனைத்துலக சமூகத்தை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த போர் கசப்பான ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றது. எமது மக்களின் முடிவில்லாத ஆதரவையும் உதவியையும் தவிர எமக்கு எந்த உதவியும் இல்லாத நிலையில் சிங்களப் படையினர் முன்னேறியபோது நாம் பின்வாங்க வேண்டியேற்பட்டது.

எமது மக்கள்தான் இப்போது குண்டுகளாலும் எறிகணைகளாலும் நோய்களாலும் பட்டினியாலும் மரணமடைந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மேலும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

எம்மிடம் இப்போது கடைசியாக ஒரே தெரிவுதான் இருக்கின்றது. எமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்வதற்கு நாம் தீர்மானித்திருக்கின்றோம். எமது அப்பாவி மக்களுடைய இரத்தம் தொடர்ந்தும் சிந்தப்படுவதை எம்மால் சகித்துக்கொள்ள முடியாது.

வடபகுதியில் இராணுவம் தனது நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியதையடுத்து பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், பட்டினியாலும், போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும் மேலும் பலர் மரணமடைந்திருக்கின்றனர். இந்தக் கொடூர நிகழ்வுகளை நிறுத்துவதற்கு எமது வரையறைக்கு உட்பட்ட எதனையும் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம். இது எமது ஆயுதங்களை மௌனிக்கச் செய்வதுடன், சமாதான நடைமுறைக்குள் பிரவேசிப்பதாக இருந்தாலும் அவற்றுக்கு நாம் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருக்கின்றோம்.

எமது மக்களுக்காகத்தான் நாம் போராடுகின்றோம் என்பதை நாம் மறந்துவிடவில்லை. தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில், எமது மக்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்துவதற்கு இந்தப் போரை சிங்கள அரசு பயன்படுத்துவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது.

நாம் எமது துப்பாக்கிகளை மௌனிப்பதற்கு தயாராயிருக்கின்றோம். எமது மக்களைப் பாதுகாக்குமாறு அனைத்துலக சமூகத்திடம் தொடர்ந்தும் கோருவதைவிட எம்மிடம் வேறு தெரிவுகள் எதுவும் இல்லை.- என்று உள்ளது. (அ)

### மோதல் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களில் உள்ள பொது மக்களை அனைவருக்கும், பாரபட்சமற்ற முறையில் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு, நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் எனத் தான் பிரார்த்தனை செய்கிறார் எனவும் பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ட் தெரிவித்துள்ளார்.

### பாதுகாப்பு வலய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சிறிய காட்டுப் பகுதியை நோக்கி படையினர் தற்போது முன்னேறி வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறியவர்கள் தற்காலிக முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர். காயமடைந்தவர்கள் வைத்திய சாலைகளில் சேர்க்கப்படுகின்றனர் எனவும் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக பொதுமக்கள் கூடாரங்களில் வாழ்ந்து வந்த பகுதிகளை நோக்கி முன்னேறியுள்ளோம். காயமடைந்தவர்களையும், நோயாளிகளையும் தேடி வருகிறோம்- எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

### பாதுகாப்பு வலயத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்கு எதிரான போரில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டார்கள் என வெளிவந்த செய்திகள் குறித்து அவரிடம் பி.பி.ஸி. செய்திச் சேவை கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் பி.பி.ஸிக்கு கூறியவை வருமாறு -

எங்களைப் பொறுத்தவரை இனி விடுதலைப் புலிகள் என்பதே கிடையாது. யாரும் எவ்வாறான அறிக்கையையும் வெளியிடலாம். இன்றைய அளவில், நாங்கள் விடுதலைப் புலிகளிட மிருந்து பொதுமக்கள் அனைவரையும் மீட்டு விட்டோம்.

அங்கு தற்போது முள் புதர்கள் நிறைந்த சிறு காட்டுப்பகுதி ஒன்று இருக்கிறது. அதை இன்றிரவோ (அதாவது நேற்று) அல்லது நாளையோ (இன்று) அவர்களின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும். எனவே, இனி அங்கு பீரங்கிகள் அல்லது துப்பாக்கிகள் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அத்தோடு, புலிகளின் துப்பாக்கிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுவிட்டன. அந்தச் சின்னஞ்சிறிய பகுதியில் சில விடுதலைப் புலித் தலைவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன் - என்றார்.

### தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர் என அரசு அறிவித்துள்ள போதிலும் அவர்களின் கெரில்லாத் தாக்குதல் தொடரக் கூடும்.

சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலத்தில் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

அரசியல் ரீதியான தீர்வுத்திட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்படாத வரையில் யுத்தம் முடிவடைந்ததாகக் கருத முடியாது.

அரசு யுத்தத்தில் வெற்றி பெற்ற போதிலும், சமாதானத்தை நிலைநாட்டுவதில் தோல்வியடைந்து விடக்கூடாது என்பதே ஐக்கிய நாடுகளின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது - என்றார். (அ-சி)

### பாதுகாப்பு வலயத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரியவந்துள்ளதாக 'த ஒப்சேவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஓமந்தைச் சோதனைச்சாவடியூடாக வெளியேறுவதற்கு இவர்கள் முயன்றனர் எனத் தெரிவித்துள்ள ஐ.நா. வட்டாரங்கள், அதன் பின்னர் இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளன.

''இவ்வைத்தியர்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறியுள்ளனர் எனக் கருதுகிறோம். அவர்களது நிலைகுறித்துக் கவலையடைந்துள்ளோம். அவர்கள் எங்கிருக்கிறார்கள் எனக் கண்டறிய முயற்சிக்கிறோம்'' என ஐ.நாவின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர்டன் வெயிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வெளிநாட்டு அரசுகள் இலங்கை அரசுக்கு கடும் அழுத்தங்களைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என ஐ.நா. அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு வலயத்திற்குச் செல்வதற்கு வெளிநாட்டு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் குறிப்பிட்ட வைத்தியர்கள் அப்பகுதியின் அவல நிலைகுறித்து நேரடி வர்ணனைகளை தெரிவித்து வந்தனர் என 'த ஒப்சேவர்' தெரிவித்துள்ளது.

அரசு இவர்களை விடுதலைப் புலிகளின் பிரசாரகர்கள் எனக் கூறி இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னர் கூறியுள்ளமையை சுட்டிகாட்டியுள்ள 'த ஒப்சேவர்' இவர்கள் காணாமற்போனது தொடர்பாக தமக்கு சம்பந்தமில்லை என இராணுவம் மறுத்துள்ளது எனவும் விவரித்துள்ளது. (அ-சி)


விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
அளவையியல்
திரு.R.S.சந்திரன்
PAPER CLASS
புதன், வெள்ளி
11 -1 மணி
ஆரம்பம் 20.05.2009
11 மணி

நாளை ஆரம்பம்
தமிழ்
திரு.குழந்தை
PAPER CLASS
செவ்., வியா. 10–11
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
பிரிவு 3
OL/ DAY CLASS
(8.30 - 2.00)
ஆரம்பம்: 21.05.2009 8.30 மணி
* இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டும்
* பிரிவு 4 விரைவில்
* 33 வருட காலமாக ஒழுங்காகவும் கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
* தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி
* பிரிவு II சில அனுமதிகள் வழங்கப்படும்.

கணினித்துறையில் அனைவரும் பயனடையும் விதமாக...
விசேட சிறப்பு சலுகை
100% செய்முறைப்பயிற்சி
கணினி & LapTop களினை நீங்களே அமைத்துக் கொள்ள...
தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
ஆரம்பம் : 18/05/2009, 20/05/2009, 23/5/2009 காலை, மாலை நேர வகுப்புக்கள்
Microprocessor, Various Mother Board Handing,All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation - of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
Duration : 2 Months
DMI COMPUTER EDUCATION
NO.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சயல்ஸ் கோன் அருகாமை) Tel.: 021- 222 4403

விற்பனையாகிறது
A/L 2009 வணிகக்கல்வி
8 வகையான புத்தகங்கள் விற்பனையாகிறது
ஆக்கம்- A.T.நந்தன் (கொழும்பு)
அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம். 222 9881

ஜப்பான் சைனா கூட்டுத்தயாரிப்புகள் விற்பனையில்
ஜப்பான் சைனா கூட்டுத் தயாரிப்பான Custom -90 Self Start
ஜப்பான் சைனா கூட்டுத் தயாரிப்பான Ceygra-110 CC Self Start
1 வருடம் / 10,000 கி.மீ வரை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
KINETIC SAFARI 4S 48 CC
லைசன்ஸ், இன்சூரன்ஸ், வரிப்பத்திரம், ஹெல்மட் தேவையில்லை.
நீங்கள் விரும்பிய நிறங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
யசோ மோட்டோர்ஸ் 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.